நாவாந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

உங்கள் மண்ணில் எங்கள் சேவை
SriLankan
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
(C/421)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 03 செவ்வாய்க்கிழமை (15.02.2011) பக்கங்கள் 12 ஓசை – 138

## வவுனியாவில் ஆட்கடத்தல்; தொடரும் மர்மம் என்ன?

(வவுனியா)

வவுனியா-வாரிக்குட்டியூர் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

வீட்டுக்குச் சென்ற ஆயுததாரிகள் வீட்டில் உள்ள தங்க நகைகளை கொள்ளையிட்டதுடன், 3 பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தரை அழைத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பொலிஸில் (11ஆம் பக்கம் பார்க்க)

## வடதாரகை –II' கப்பலுக்கு நேற்று வெள்ளோட்ட விழா

(ஊர்காவற்துறை)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் பயணிகள் போக்குவரத்துக்காக 800 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வடதாரகை-II போக்குவரத்துப் படகின் வெள்ளோட்டம் நேற்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி படகின் வெள்ளோட்டம் புங்குடுதீவு குறிகாட்டுவான் பகுதியிலிருந்து (11ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விமானத்தில் வெடிகுண்டுப் புரளி!

(கொழும்பு)

லண்டன் நோக்கிச் சென்ற ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக புரளி கிளப்பப்பட்டதையடுத்து விமானத்திலிருந்த பயணிகள் வெளியேற்றப்பட்டு விமானம் தீவிரமாக சோதனையிடப்பட்ட சம்பவம் நேற்று மாலைதீவில் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து புறப்பட்ட இவ்விமா னம் மாலைதீவில் தரையிறங்கியபின், விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக பிரிட்டனைச் சேர்ந்த பயணியொருவர் சக பயணிகளை எச்சரித்தாராம். (12ஆம் பக்கம் பார்க்க)

# தடுப்புக் காவல் கைதிகளின் விடுதலை சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்வு

## பத்துப் பேர் கொண்ட குழு நியமனம்

(கிளிநொச்சி)


**தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் விடுதலை குறித்து ஆராய்வதற்கும் அவ்விடயம் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சட்ட மா அதிபர் திணைக்களம் பத்துப்பேர் அடங்கிய விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது. மிகவிரைவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் விடயத்தில் சாதகமான தீர்மானம் எடுக்கப்படவிருப்பதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.** (11ஆம் பக்கம் பார்க்க)







## நெடுந்தீவுக்கான கடல் பயணம்; நெடுநாள் கனவு நிறைவேறியது



### வெள்ளோட்ட விழாவில் அமைச்சர் டக்ளஸ் உரை

(நெடுந்தீவு)

நீண்டகாலமாக நெடுந்தீவு மக்கள் எதிர்நோக்கிவந்த கடற் போக்குவரத்திற்கு சிக்கலுக்கு தாம் உறுதியளித்தபடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சகல வசதிகளுடனும் கூடிய புதிய சிறயரக கப்பல் ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளார். 800 இலட்சம் ரூபா செலவில் கொழும்பு டொக்யாட் தளத்தில் கட்டப்பட்ட (11ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்

### தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதி தமிழ் மக்கள் சுதந் திரமாக வாக்களிப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று இலங்கையின் தேர்தல் ஆணையாளரிடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்றுப் பிற்பகல் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தேர்தல் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் காணாமல் போகும் சம்பவங்கள்; காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போகும் சம்பவங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை வலியுறுத்தியுள்ளது. இலங்கையின் மனிதவுரிமை செயற்பாட்டாளர் பட்டானி ரசீக் காணாமல் போன ஒரு வருட நிறைவை முன்னிட்டே சர்வதேச (12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பூரண ஆதரவளிக்கப்படும்

## இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய தூதுவர்

(கொழும்பு)


இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பூரண ஆதரவளிக்கப்படும் என பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்றக் காலத்திலும் அதன் பின்னரும் இலங்கைக்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசல் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று சமர்ப்பித்துள்ளார்.

இதன் போது கருத்து வெளியிட்ட ஜோன் ரான்கீன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நிலவி வரும் வரலாற்று ரீதியான உறவுகளை தொடர்ந்தும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் (12ஆம் பக்கம் பார்க்க)



# வடக்கில் குழந்தை பராமரிப்பு நிலையங்கள்; பதிவு செய்யும் நடவடிக்கை இன்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் பல்வேறுபட்ட நிறுவனங்களால் இன்று முதல் நடாத்தப்படும் குழந்தைப் பாராமரிப்பு நிலையங்களை, பதிவு செய்யும் நடவடிக்கை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நடவடிக்கை மூலம், பதிவு செய்யப்படாத குழந்தைப் பாராமரிப்பு நிலையங்கள் அடையாளம் காணப்படவுள்ளதுடன், அவற்றை அரசாங்க சட்ட விதிகளுக்கு அமைவாக பதிவு செய்து கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யுத்த முடிவைத் தொடர்ந்து வட மாகாணம் பூராக பல்வேறுபட்ட நிறுவனங்களினால் குழந்தைப் பாராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறுவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் முக்கிய தேவையாக உள்ளதாக வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார். இதுவரை வவுனியா மாவட்டத்தில் பதிவுசெய்யப்படாத 11 நிலையங்கள் கண்டறியப்பட்டுள்ளன.



இக் குழந்தைப் பராமரிப்பு நிலையங்களில் ஏறத்தாழ 4,000 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் பலர் தாய் அல்லது தந்தையை இழந்தவர்களாக அல்லது இருவரையும் இழந்த பிள்ளைகளாக காணப்படுகின்றனர். சிறுவர்ளை வறுமை காரணமாக சிறந்தமுறையில் பராமரிக்க முடியாதவர்களின் பிள்ளைகளும் இங்கு உள்ளனர். மேலும் இங்குள்ள சிறுவர்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றமை தொடர்பாகவும், தமது பெற்றோர்களை சந்திக்க வழங்கப்படும் அவகாசம் தொடர்பாகவும் இங்கு கண்காணிக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

## மீண்டும் கடற்தொழிலாளர்களுக்கு பாஸ் நடைமுறை; இராணுவம் அறிவிப்பு

(வடமராட்சி)

யாழ். வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு புதிய பாஸ் நடைமுறை ஒன்றை இராணுவத்தினர் அறிமுகப்படுத்தியுள்ளதாக வடமராட்சி கடற்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்தொழிலுக்குச் செல்லும் பொழுது ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் தேசிய அடையாள அட்டையையும், மீனவர் அடையாள அட்டையையும் படைமுகாமில் ஒப்படைத்து விட்டு இராணுவத்தினர் வழங்கும் மீன் பிடி அனுமதி அட்டையுடன்தான் கடற்தொழிலில் ஈடுபடவேண்டுமென இராணுவத்தினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இதனை மீறிச் செயற்படும் கடற்தொழிலாளர்களுக்கு மீன் பிடித்தலுக்கான அனுமதி மறுக்கப்படும் என படையினர் தெரிவித்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (100)

## வாக்காளர் அட்டை விநியோகம்; யாழ். செயலகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று முன்தினம் யாழ். செயலகம் வந்து சேர்ந்துள்ளன.

இவை தற்சமயம் யாழ். உதவித்தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டு தரம்பிரிக்கும் சேவைகள் நடைபெற்றுவருகின்றன.

இதன் பின்னர் இவ் வாக்காளர் அட்டைகள் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு தபாலகங்கள் மூலமாக வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். உதவித்தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இவ் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி நாடு பூராகவும் நடைபெறவுள்ளது.

இத்தேர்தலிற்கான கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கான தபால் மூலமான வாக்களிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2009**

**பொது மற்றும் சிறப்புக்கலைமாணித் தேர்வு பகுதி -I- 2008&2009**

**[வெளிவாரி]**

மேற்படி பரீட்சையை 26.03.2011 (சனிக்கிழமை) தொடக்கம் 09.04.2011 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 22.03.2011 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
(C/451) 14.02.2011


## பனங்கிழங்கை ருசிக்கும் காட்டுப் பன்றிகள்

தும்பளை-இலட்சுமணன் தோட்டத்தை அண்டிய பிரதேசங்களில் இரவுவேளைகளில் காட்டுப்பன்றிகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

தற்பொழுது பனங்கிழங்கு சீசனாகும் பனம் பாத்திகளை பன்றிகள் முற்றாக நாசம் செய்கின்றன. கிழங்குகளை அவை உண்பதால் பனங்கிழங்குச் செய்கை மேற்கொள்வோர் பாதிப்படைந்துள்ளனர்.

முன் எப்போதும் இல்லாதவாறு பாதிப்பு இம்முறை அதிகரித்துள்ளது. வேலிகளில் முட்கம்பிகளால் தடம்இட்டு அவற்றைப்பிடிக்கும் முயற்சியும் பயனாளிக்கவில்லை. பன்றிகளை வேட்டையாடுவோரும் தற்போது இல்லை. இதனால் அவர்கள் செய்வதறியாதுள்ளனர். (62)

## சித்திரத்தேருக்கு பவளக்கால் நாட்டல்

(ஊர்காவற்துறை)

தம்பாட்டி-நுனிபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கான புதிய தேருக்கான பவளக்கால் வைத்தலும் தேர்முட்டிக்கான அடிக்கல் நாட்டு வைபவமும் நாளை காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்துக்கான புதிய தேரினை நாச்சிமார் கோவிலடி கணிகா சிற்பமாலய சித்திர சிற்பக் கலாமணி அவர்களும் அவரது குழுவினரும் இணைந்து கடந்த 10 மாதங்களாக உருவாக்கியுள்ளனர். இச் சித்திரத்தேர் 31 அடி உயரம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சித்திரத் தேர் ஆலயத்தின் வருடாந்த உற்சவமான சித்திரை மாதம் 16ஆம் நாள் வெள்ளோட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (27)


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R017)


## விடைபெறும் செஞ்சிலுவைக் குழு; வழியனுப்பும் ஜெய்ப்பூர் நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ்ப்பாணத்திலிருந்து இம்மாத இறுதியுடன் வெளியேறுவதனால் அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று பிரதான வீதியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தில் நடைபெற்றது.

ஜெய்ப்பூர் நிறுவனத்தலைவர் திருமதி வைத்தியர் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வைத்தியர் தெய்வேந்திரம், முன்னாள் நீதிபதி திருநாவுக்கரசு, ஜெய்ப்பூர் நிறுவன ஊழியர் ஜோன்சன் ஆகியோர் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் தொடர்பாகவும் அவர்கள் 1989ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட சேவைகள் தொடர்பாகவும் உரையாற்றினர்.



இந்நிகழ்வில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி புளொரிடாவுக்கு நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டிருந்தது. இந்நினைவுப் பரிசினை ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் வைத்தியர் திருமதி கணேசமூர்த்தி வழங்கிக் கௌரவித்தார்.

இந் நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஜெய்ப்பூர் நிறுவன ஊழியர்கள் பயனாளிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கு கொண்டு செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பணிகளுக்கு தமது பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தனர். (மி,பா)

## வெங்காயத்தில் அதிக பிரியம்; படையெடுக்கும் வியாபாரிகள்

(கரணவாய்)

வடமராட்சி-கெருடாவில் பகுதியில் வெங்காயப் பயிர்ச் செய்கை மழையினால் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. தற்போது வெங்காயத்தின் விலை உயர்வினால் ஒரு கிலோ வெங்காயத்தை 200 ரூபா வீதம் தென்பகுதி வியாபாரி களுக்கு அவற்றை சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆயிரம் கன்றுகளை நடக்கூடிய நிலப்பரப்பில் அதிக விளைச்சலுடன் 40 ஆயிரம் ரூபாவைப் பெறமுடியாத நிலையில் அதே நிலப்பரப்பில் வெங்காயச்செய்கையை மேற்கொண்டு 40 ஆயிரம் ரூபாவை பெறக்கூடியதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (18)

## வன்னியில் பள்ளிவாசல்; இன்று அடிக்கல் நாட்டப்படும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 55ஆம் கட்டையிலுள்ள முஹிதீன் பள்ளிவாசல் புனர்நிர்மானம் செய்யப்படவிருக்கின்றது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று நடைபெறும். இப்பள்ளிவாசலை எம்.எப்.சீ.டி.(MFCD) நிறுவனம் நிர்மானப் பணிகளை மேற்கொள்கின்றது.

இப்பள்ளிவாசலின் நிர்வாக சபைத் தலைவர் பி.எஸ்.எம். சரபுல் அனாம் மேற்பார்வையில் நாளை நடைபெறும் ஆரம்பப் பணியில் நிறுவனத்தின் அதிகாரிகளும் அரச உயர் அதிகாரிகளும் கலந்துகொள்வதாக . தலைவர் கூறியுள்ளார்.

## எழுத்தாளர் யோசப் பாலாவின் மணிவிழா நிகழ்வு



எழுத்தாளர் யோசப்பாலாவின் மணிவிழாவை முன்னிட்டு இலக்கிய நண்பர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றல் மற்றும் இறைவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. வரவேற்புரையை யஸ்ரின் நிகழ்த்த தலைமையுரையை வாழ்வகம் இயக்குனர் இரவீந்திரன் ஆற்றினார். இதனையடுத்து மணிவிழா வாழ்த்துப்பா இசைக்கப்பட்டது.

தொடர்ந்து எழுத்தாளர் யோசப்பாலா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் ஆற்ற சிறப்புரையினை மனநல மருத்துவர் சிவதாஸ் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மருத்துவர் சிவதாஸ் எழுதிய 'மகிழ்வுடன்' எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலை வாழ்வக இயக்குனர் இரவீந்திரன் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை பருத்தித்துறை அஞ்சலியக துணை இயக்குனர் விஜேந்திரா பெற்றுக்கொண்டார். இறுதியாக நன்றியுரையினை பா.துவாரகன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில், எழுத்தாளர்கள், வைத்தியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பெண்கள் பக்திப்பாடல்கள் பயிலுவதும், பாடுவதும் மிகவும் நல்லது. ஆனால் நினைத்த இடங்களில் அவர்களைப் பாடவிடக்கூடாது. அப்படியானால் பெண்களுக்கு இயல்பாக இருக்க வேண்டிய நாணத்தை அவர்கள் இழந்து விடுவார்கள்.
- ஸ்ரீ இராமகிருஷ்ணர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கண்காணிப்பு அவசியம்

எந்தவொரு மனிதனும் தனது வாழ்நாளில் சுகதேகியாக வாழ்ந்து மடிவதையே விரும்புவான். இதற்கு எவரும் விதிவிலக்கானவர்கள் அல்ல.

எமது உணவுப் பழக்கவழக்கங்கள் எம்மை அறியாமலே நோய்த் தொற்றுக்களை ஏற்படுத்தி வருகின்றன. இந்நிலையில், நாம் எதிலும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என்ற படிப்பினையைக் கற்றுக்கொள்ள முடிகிறது.

குடாநாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் உணவுச்சாலைகள், தேநீர்க்கடைகள் மாரிகாலத்தில் முளைவிடும் காளான்போல் முளைவிட்டிருப்பதைக் காணமுடிகிறது.

இவற்றின் வெளித்தோற்றம் பார்வைக்கு அழகாக இருந்தாலும், உட்புறத்தின் அழகு எப்படி இருக்கும் என்பதை எவரும் அறிந்து கொள்வதில்லை. அறிந்துகொள்ள முயல்வதுமில்லை. இது மனித இயல்பு.

உண்மையில் உணவுச்சாலைகளின் சமையலறைப் பக்கத்தைப் பார்க்கநேரிட்டால் அங்கு உணவு உண்பதற்கே மனம்வரமாட்டாது. என்ன செய்வது, வயிற்றுப் பசியைப் போக்கவேண்டுமென்பதற்காக சாப்பிடவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகவேண்டியுள்ளது.

உணவுச்சாலை உரிமையாளர்களுக்கு சுகாதாரப் பகுதியினர் எப்படித்தான் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தாலும் மிகவும் சொற்பமானவர்களே அதனைக் கடைப்பிடித்து வருவதைக் காணமுடிகிறது.

உணவுப்பண்டங்களை இலையான்கள், கொசுக்கள், நுளம்புகள் என்பவற்றிலிருந்து பாதுகாத்து அவற்றை மூடிவைத்திருங்கள் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி வருகின்ற போதும், கண்ணாடி அலுமாரிக்குள் இலையான்களையும் விட்டு மூடிவைக்கிறார்கள். பழுதடைந்த உணவுப்பொருட்களை விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள்.

இத்தகைய சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வந்த உணவகங்களையும், யூஸ் விற்பனை நிலையங்களையும் சண்டிலிப்பாயிலும், பண்டத்தரிப்பிலும் சுகாதாரப் பரிசோதகர்களின் அதிரடிப் பரிசோதனை மூலம் கண்டுபிடித்து நீதிமன்றம் வரை கொண்டுசென்று அவற்றுக்கு 'சீலும்' வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உணவகங்களையும், தேநீர்ச் சாலைகளையும் சுகாதாரப் பகுதியினர் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்திவரினும், யூஸ் தயாரிப்பு நிலையங்களைக் கண்காணிப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. என்றாலும், அவற்றைக் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டிய அவசிய தேவை இன்று உள்ளது.

தற்போது உஷ்ணம் அதிகரித்த காலநிலை காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் முதல் வயது வந்தவர்கள் வரை யூஸ் பாவனையில் பழக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அது இயற்கையே.

காலாவதியான பால்மா வகைகளை மலிவான விலையில் பெற்று சுகாதாரமற்ற தண்ணீரில் கலந்து தயாரிக்கப்பட்ட யூஸ்களை குளிரூட்டிகளில் வைத்து விற்பனைக்கு விடும் தயாரிப்பாளர்கள் மீது யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினரும், பொது சுகாதாரப் பகுதியினரும் தீவிர கண்காணிப்பைச் செலுத்த வேண்டும்.

இதனை அருந்துபவர்கள் தைபோயிட் காய்ச்சல், சளிக்காய்ச்சல், இருமல் என்பவற்றினால் பீடிக்கப்படுவார்கள் என்று சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் எச்சரிக்கையை தட்டிக்கழித்து விடாமல் நோய் வரும் முன்பு எம்மைப் பாதுகாக்கும் வழிவகைகளை நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

-ஆசிரியர்-

# வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வடிகால் கட்டமைப்பு அவசியம்

## பேராசிரியர் அன்ரனி நோபட்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த கால யுத்தத்தால் பெருமளவிலான காடுகள் அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், மண்ணரிப்புக் காரணமாக தரைத் தோற்ற அமைப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களே இம்முறை வெள்ள அனர்த்தத்தினால் இழப்புகள் அதிகரிக்கக்காரணம் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை பேராசிரியர் எஸ்.அன்ரனி நோபட் தெரிவித்தார்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் வடிகால் கட்டமைப்புகளை சீரமைக்கும் போது, ஆறுகள் மற்றும் குளங்களுடன் தொடர்புபடுத்தி கால்வாய்களை அமைக்க வேண்டும் எனவும், இந்த நடவடிக்கை அவசியமானதும் அவசரமானதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆறு, குளங்கள் ஆழமாக்கப்பட்டு, கால்வாய்கள் கடலுடன் தொடர்புபடுத்தப்படுவதன் மூலம் பிரதேசத்தில் விவசாயத்தை ஊக்குவிக்கவும், மாரிகாலங்களில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வாறு மழை நீரை இலகுவாகக் கடலுக்கு அனுப்ப முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இம்முறை வடக்கு, கிழக்கு பகுதியில பெரும் சேதங்களை ஏற்படுத்திய வெள்ளப்பெருக்குக்கு வடிகாலமைப்புக்குள் அடங்காத அளவுக்கு இடைவிடாது தொடர்ந்து பெய்த அடைமழையே முக்கிய காரணம் எனவும், ஆனால் வடிகால் கட்டமைப்புகள் நவீன மயப்படுத்தப் படும் பட்சத்தில் சேதங்களின அளவைக் குறைக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கப்பம் பெற முயன்றவர் கண்டியில் கைதானார்

(வவுனியா)


வவுனியா வர்த்தகர்களிடம் தொலைபேசி மிரட்டல்களை விடுத்து கப்பம் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கண்டியைச் சேர்ந்தவர் என பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் தொடர்பில் வவுனியாப் பொலிஸாருக்கு கிடைத்த புகாரைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் வவுனியாவிலிருந்து கண்டிக்குச் சென்ற விசேட பொலிஸ் குழு குறித்த நபரைக் கைது செய்து விசாரணைக்கு வவுனியாவிற்கு கொண்டுவந்துள்ளதுடன் அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

## பொருளாதார அபிவிருத்திப் போர்வையில் சர்வாதிகார ஆட்சியை ஏற்க முடியாது

## என்கிறார் ரணில்



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுபீட்சம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் சர்வாதிகார ஆட்சியை ஏற்றுக்கொள்ள முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொதுநலவாய பாராளுமன்ற பேரவையின் 3 ஆம் அமர்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

மோசமான ஆட்சி மற்றும் ஊழல் மோசடிகளினால் மக்களுக்கும் நாட்டுக்கும் எதுவித நன்மையும் கிடைக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழல் மோசடிகளை மேற்கொள்ளும் தலைவர்களுக்கு எதிராக உலக மக்கள் அணி திரண்டு வருவதனை தற்போது அவதானிக்க முடிந்துள்ளதாக அவர குறிப்பிட்டுள்ளார். ஊழல் மோசடிகளை மூடி மறைப்பது ஜனநாயகமாகாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தியைக் காரணம் காட்டி நாட்டில் அரசியல் சாசன ரீதியான சர்வாதிகாரத்தை மேற்கொள்ளும் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே பொருளாதார அபிவிருத்தி அர்த்தமுள்ளதாக அமையும் என அவர் சுட்டிக காட்டியுள்ளார்.

## நிதி மோசடி மூவர் கைது

(கொழும்பு)

தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்திலிருந்து (ஏ.ரி.எம்) சட்டவிரோதமான முறையில் பணத்தைப் பெற்ற உக்ரேன் பிரஜை ஒருவரும் அவருக்கு உதவியதாகக் கூறப்படும் இலங்கையர் இருவரும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் பல மில்லியன் ரூபா பணத்தை தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திரத்திலிருந்து எடுத்திருப்பதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக நம்பப்படுகின்றது.

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாசாலை அதிபர் செ.இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பழைய மாணவியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பத்மினி சிதம்பரநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## கடந்தவருடத்தில் மட்டும் 227 யானைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 2010 ஆம் ஆண்டில் மாத்திரம் 227 யானைகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை, வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், இலங்கையில் வருடம் ஒன்றிற்கு குறைந்தது 200 யானைகள் என்ற வீதத்தில் உயிரிழப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவற்றுள் பெரும்பாலானவை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழபபதாகவும் அவர் தெரிவித்தார். இந்த நிலையில், கடந்த வருடத்தில் 80 பேர் யானை தாக்கி உயிரிழந்துள்ளனர். இதனிடையே மனிதர்களால் யானைகளுக்கும், யானைகளால் மனிதர்களுக்கும் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## இறுதிப் பரீட்சை

(யாழ்பாபணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை இறுதிப்பரீட்சை 2009(2011) (பழைய பாடத்திட்டம்) எதிர்வரும் 2011.02.18, 19, 20, 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக கலாசாலை அதிபர் ம. இக்னேசியஸ் அறிவித்துள்ளார். எனவே கலாசாலையில் நூனசித்தி பெற்ற விண்ணப்பித்த ஆசிரிய மாணவர்கள் உடன் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக கொண்டுள்ளார்.

# விளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர்ந்து பங்கெடுக்க வேண்டும்

## பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தலைவர்



(யாழ்ப்பாணம்)

ஒரு மனிதனுக்கு கல்வி எவ்வளவு முக்கியமோ அதே போன்றுதான் விளையாட்டும் முக்கியமானது. இணை பாடவிதான செயற்பாடுகளில் விளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர்ந்து ஆர்வத்துடன் பங்கெடுக்க வேண்டும் என பருத்தித்துறை பிரதேசசபையின் முன்னாள் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் குறிப்பிட்டார்.

வடமராட்சி கிழக்கு, குடத்தனை கரையூர் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டுப போட்டி அதிபர் மு.கதிர்காமலிங்கம் அவர்கள் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிடுகையில், இப்பாடசாலையின் பல தேவைகள் எமக்குச் சுட்டிக்காட்டப்பட்டன. அவற்றில் பல தேவைகள் ஓரளவு பூர்த்தியடைந்துள்ளன. ஏனைய தேவைகள் அமைச்சரின் பார்வையில் உள்ளன. அத்தேவைகளும் படிப்படியாக நிறைவேறும் எனத் தெரிவித்தார்.

இந்திகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா அவர்களும், கௌரவ விருந்தினராக குடத்தனை இராணுவமுகாம் அதிகாரி கப்டன் என்.எல்.சி சந்திரஜித் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக ரஞ்சன் குருக்கள் மற்றும் வணக்கத்துக்குரிய ஜோன் புவியரசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மாசிமக நிகழ்வு

(அளவெட்டி)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாசிமகம் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட இருக்கிறது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேகம், ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9 மணிக்குச் சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று அம்பாள் திருவீதி எழுந்தருள்வார். நண்பகல் 12 மணிக்கு அடியார்களுக்கான மகேஸ்வர பூசை இடம்பெறும். (68)

## 20 கடைகள் கொண்ட கட்டடத் தொகுதி அமைக்க பிரதேச சபையினால் ஏற்பாடு

(பருத்தித்துறை)

பச்சிலைப்பள்ளி நகரப் பகுதியில் 20 கடைகள் கொண்ட தொகுதிக் கட்டடம் ஒன்று கட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலர் என்.சிவப்பிரகாசம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேச செயலர் தெரிவிக்கையில்-

இப்பிரதேசத்தில் முன்னர் கட்டப்பட்டிருந்த கடைத் தொகுதிகள் யுத்த அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்ததையடுத்து அவற்றை மீளக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கட்டடத் தொகுதியை கட்டுவதற்கு 'என்றிப்' நிறுவனத்தின் அனுமதியைக் கோரியுள்ளோம்.

இதற்கு 50 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது. இந்நிதி கிடைத்ததும் இந்நிறுவனத்தின் அனுசரணையுடன் இக்கட்டடத்தைக் கட்டுவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (100)

# குடிநீர் வசதிகள் இல்லாமையினால் செல்வபுரத்தில் 60 குடும்பங்கள் பாதிப்பு!

(கரணவாய்)

கரணவாய் செல்வபுரம் பிரதேசத்தில் குடிதண்ணீர் இன்றி 60 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் குடியிருக்கும் மக்கள் வயல் வெளிகளில் உள்ள கிணற்றிலிருந்தே குடிதண்ணீர் பெற்றுவந்த நிலையில் தற்போது பெய்த மழை காரணமாக வயல்களில் உள்ள கிணற்று நீர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள இந் நீரைப் பயன்படுத்துவதனால் நோய்கள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பலமுறை கரவெட்டி பிரதேச செயலருக்கும் மற்றும் கரணவாய் கிராம சேவையாளர் ஆகியோருக்கும் தெரிவித்தும் அதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இதனை அடுத்து வயல் வெளியிலுள்ள ஒரு வீட்டில் தண்ணீர் பெற்று வந்த நிலையில் தற்போது அந்த வீட்டுக்காரர் தண்ணீர் பைப்பையும் கதவையும் பூட்டி வைத்துள்ளதால் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாக அம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பொது நிறுவனங்கள், மற்றும் அதிகாரிகள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு ஆவன செய்துதரமாட்டார்களா என அம்மக்கள் ஆதங்கத்துடன் கேட்டுக்கொள்கின்றனர். (18)

## வீதி அகலிப்பு

(கொக்குவில்)

ஓட்டுமடம், ஆலடிச் சந்தி, ஐந்து சந்தி மற்றும் முட்டாசுக் கடைச் சந்திப் பகுதிகள் அடங்கிய மானிப்பாய் வீதியில் புனரமைப்பு, வீதி அகலிப்புச் செய்தல் ஆகியன இடம்பெற்று வருகிறது.

அதற்காக மேலதிகமாக மதில்கள், கடைகள், வீடுகள் உடைக்கப்படாமல் இரு ஓரங்களிலும் காணப்பட்ட வெற்றிடங்களுக்கு வீதியமைப்புச் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (68)

## கிளிநொச்சி மாவட்டத்தில் இருவேறு கலந்துரையாடல்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்லாறு பிரதேச மீனவர்கள் கடற்றொழிலை மேற்கொள்ள அனுமதிப்பது தொடர்பாகவும் மிதிவெடிகளை அகற்றுவது தொடர்பாகவும் முக்கிய கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் மற்றும் படையதிகாரிகள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, விசுவமடு, கரைச்சி, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்குக் கீழ் இயங்கி வரும் 2 பொதுச் சந்தைகளில் தற்போது ஏற்பட்டுள்ள நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று அன்றைய தினம் நண்பகல் இடம்பெறவுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அமைப்பாளர் வை.தவநேசன், கிளிநொச்சி அரச அதிபர், முல்லைத்தீவு அரச அதிபர், குறித்த பிரதேச சபைச் செயலாளர்கள், பொதுச் சந்தைகளின் வியாபாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (69)

## செல்லையா மெற்றாஸ்மயிலின் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் கலாபூஷணம் அமரர் செல்லையா மெற்றாஸ்மயிலின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை பி.ப. 4மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் நினைவுரைகளை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் நிகழ்த்த வுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, நாட்டார் இலக்கியங்களில் மெற்றாஸ் மெயிலின் பங்கு என்னும் தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் "முல்லைத்தீவுக் கூத்து மரபில் மெற்றாஸ்மயிலின் பங்கு" என்னும் தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க.கலாமணி "இசை நாடகப் பேணுகையில் மெற்றாஸ்மயிலின் பங்கு"என்னும் பொருளிலும், யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை " மெற்றாஸ்மயிலின் நிர்வகாத்திறன்" என்னும் தலைப்பிலும் மற்றும் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் அடிகளார் ஆகியோரும் நினைவுரைகளை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் 'வள்ளி திருமணம்' இசைநாடகம், ஒயிலாட்டம், காத்தவராயன் கூத்து, பணடாரவன்னியன் தென்மோடி நாட்டுக் கூத்து ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.






**யாழ்.சென்.மேரிஸ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி, கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தேசியக் கொடியினை ஏற்றுவதையும், மாணவர்களின் அணி நடையினையும் படங்களில் காணலாம். (மி, பா)**

# சீனி, சீமேந்தைக் கொள்வனவு செய்வதற்கு கிராமிய வங்கிகளின் சமாசம் நடவடிக்கை




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசம், சீனி, சீமேந்து என்பவற்றைக் கொழும்பிலிருந்து கொள்வனவு செய்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சங்கங்களில் நிதிப் பற்றாக்குறை நிலவிவந்தாலும், போதியளவு வாகனங்களை வைத்திருப்பதால் அவ்வாகனங்களில் சீனியையும், சீமேந்தையும் கொழும்பிலிருந்து தருவித்து, மலிவான விலையில் வழங்குவதற்கென ஒரு ஏற்பாடாக கிராமிய வங்கிகளின் சமாசம் இதனைச் செய்ய முன்வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேற்படி சமாசத்தினால் இவ்விரு பொருட்களும் கடனாக வழங்க விருப்பதாகவும், விற்பனைக்குப் பின் கடன்தொகையை சங்கங்கள் முறையாகச் செலுத்த வேண்டும் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். மாநகர மத்திய பகுதி மேம்பாட்டு நடவடிக்கையை அமைச்சர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)



நாடு முழுவதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகர மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், யாழ். நகரப்பகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானநதா அவர்கள் நேற்று முன்தினம் மாலை பார்வையிட்டார்.

யாழ். மாநகர அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் கடந்த சில வாரங்களாக கூடிய கவனம் செலுத்தியதுடன், அதன் மேம்பாட்டு நடவடிக்கைகளில் நேரடிக் கவனம் செலுத்தி வந்த அமைச்சரவர்கள் நேற்று முன்தினம் யாழ். மாநகர முதல்வர் மற்றும் மாநகரசபை உயரதிகாரிகள் சகிதம் நகரப்பகுதியை நேரடியாகப் பார்வையிட்டார்.

இச்சமயம் உரிய பணிப்புரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அகற்றப்பட்ட நடைபாதைக் கடைகளுக்குப் பதிலாக அமைக்கப்பட்டுள்ள புதிய அங்காடிக் கடைகளையும் யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதி சுற்றாடல் மற்றும் புதிதாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள பகுதிகளையும் நேரடியாகப் பார்வையிட்டமை குறிப்பிடத் தக்கது.

# யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் ஒல்லாந்தர் கால பீரங்கிக் குண்டுகள்

(கொட்டடி)

யாழ். கோட்டையின் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்றாலும்கூட, தொழிலாளர்கள் மிகவும் அவதானத்துடனேயே தமது பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இந்தப்புனர் நிர்மாணப் பணியின்போது, வெடிக்காத குண்டுகள் மற்றும் சன்னங்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பதால் தொழிலாளர்கள் மிகவும் அவதானத்துடன் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குண்டுகள் தொல்லியல் திணைக்கள ஆய்வாளர்களால் மீட்கப்பட்டன.

ஒல்லாந்தர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பீரங்கிக் குண்டுகள் அதிகமாக மீட்கபபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

# ஐ.தே.கவின் தேர்தல் பிரசாரம் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில்

(வவுனியா)

ஐ.தே.கட்சி வடமாகாணத்திற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி காலையும், கிளிநொச்சியில் மாலையும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள பிரசாரக்கூட்டங்களில் கட்சியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கருஜெயசூரிய, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன, சுவாமிநாதன், சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளனர். (39)

# யாழ். நகரில் சைக்கிள் பாதுகாப்பு உரிய இடமின்றி மக்கள் பரிதவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் துவிச்சக்கரவண்டிகளைப் பாதுகாப்பாக வைத்துவிட்டுச் செல்வதற்கு போதிய பாதுகாப்பு நிலைய வசதிகள் இல்லாமையால் மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்தத் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலைய வசதிகள் இல்லாமையால் நகருக்கு வரும் மக்கள் வீதியோரங்களில் தமது துவிச்சக்கர வண்டிகளை பூட்டி விட்டு செல்லவேண்டிய நிலைப்பாட்டிற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பூட்டி விட்டுச் செல்லும் துவிச்சக்கர வண்டிகள் காணாமல் போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (25)

# நிர்வாகசபை தெரிவு

(கரணவாய்)

நெல்லியடி ஆட்டோ சங்கத்தின் புதிய நிர்வாகசபை நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் இந்திரன் புஸ்பகான் தலைவராகவும், கிறோஷர் செயலாளராகவும், கே.யோகநாதன் பொருளாளராகவும், இ. கிருஷ்ணராஜா மற்றும் ரி. நந்தனார் பொறுப்பாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (18)

## ஆதினியின் இன்றைய பலன்
(15.02.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 03

இராகுகாலம் 3.33– 5.03, சுபநேரம் 11.03 –12.33, துவாதசி மு.இ8.04, திருவாதிரை மரண யோகம் மு.ப.8.44.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– வீண் செலவு, அவசர முடிவு, தீயோர் சந்திப்பு.

ரிஷபம்:– வாக்கு வசீகரம், நினைத்த காரியச் சித்தி, அயலார் நேசம்.

மிதுனம் :– நண்பர்கள் உதவி, நல்ல காரியம் செய்தல், கௌரவிக்கப்படல்.

கடகம்:– பெரியோர் உதவி, பயணத்தால் நன்மை, வசீகரமான பேச்சு.

சிம்மம்:– தெய்வ தரிசனம், புண்ணியகாரிய விருப்பம், செய்தியால் நன்மை.

கன்னி :– பழைய கடன் வசூல், பணவரவு, பெரியோர் ஆசி.

துலாம் :– உதவிகள் செய்தல், நண்பர் சேர்க்கை, பணவரவு.

விருச்சிகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, தாய்வழி உதவி, போசன சுகம்.

தனுசு:– எதிர்ப்பாலார் நட்பு, போற்றப்படல், நினைத்த காரியச் சித்தி.

மகரம்:– காரிய சித்தி, விருந்துபசாரம், பெரியோர் உதவி.

கும்பம் :– வேண்டாத எண்ணம், வீண் செலவு, திருடர் பயம்.

மீனம்:– காரியத்தடை, விதண்டாவாதம, நண்பர் வெறுப்பு.

# மலசலகூட, குடிநீர் வசதிகளின்றி சிரமத்தை எதிர்நோக்கும் பயணிகள்

(கரணவாய்)

நெல்லியடி ஆட்டோ சங்கத்திற்கு அத்தியாவசிய தேவைகளான குடிநீர், மலசலகூட வசதிகள் இன்றிக் காணப்படுவதால், தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது சங்க உறுப்பினர்கள் அத்தியாவசிய வசதிகள் இன்றிப் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வரும் நிலையில் இது தொடர்பாக நெல்லியடி பிரதேச சபையினரிடம் பலமுறை தெரிவித்தும் இதுவரை அதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, நெல்லியடி பஸ் நிலையத்திலும் இவ்வாறான வசதிகள் இன்றிப் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

நீண்ட தூரத்திலிருந்து பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளின் தாகத்திற்குக்கூட தண்ணீர் இன்றிப் பெரும் அவலப்படுகின்றனர்.

இதைவிட மலசலகூடம் இன்றி மக்கள் சிரமப்படுவதுடன், இதனால் சுகாதாரச் சீர்கேடுகளும் இடம்பெறுமென அஞ்சப்படுகிறது.

எனவே, எமது சங்கத்திற்கும், பஸ் நிலையத்திற்கும் இந்த அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்த நெல்லியடிப் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (18)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அச்சுவேலி)

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஆர்.இராஜசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன் சிறப்பு விருந்தினராகவும், திறந்த பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் ஜே.பிரபாகரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (03)

(அச்சுவேலி)

யாழ். ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் அ. அருள்நந்திசிவம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும் யாழ். கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் வ. செந்தூரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (03)

(அச்சுவேலி)

யாழ்.தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் மு. இராஜவரோதயம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் நா. சுவாமிநாதன் சிறப்பு விருந்தினராகவும் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நா. மகேஸ்வரி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (03)

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளையதம்பி இந்துவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.


வித்தியாலய அதிபர் திருமதி ம.கதிரேசபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சட்டத்தரணியும், சமூகசேவையாளருமான செல்வி ஞானலோஜினி சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (மி)

# பாலித கோஹன்னவிற்கு எதிராகவும் போர்க்குற்றச்சாட்டு வழக்குப் பதிவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலித கோஹன்னவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கொன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இன அழிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு மற்றும் சுவிஸ் ஈழத் தமிழர் பேரவை என்பன கூட்டிணைந்து அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.



நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்திருக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலேயே கலாநிதி பாலித கோஹன்னவுக்கு எதிரான வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டின் மே மாதம் 18ஆம் திகதி வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களான ரமேஷ்,புலித்தேவன் மற்றும் நடேசன் ஆகியோரின் படுகொலையில் பாலித கோஹன்னவுக்கும் பங்கிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டே அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அவருக்கு எதிரான முறைப்பாடுகளுடன் ஒளிப்பதிவு நாடாக்களும் ஆதாரமாகச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னதாக குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அறியக் கிடைத்துள்ளது.


# சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் 13 கப்பல்கள்

(கொழும்பு)

சர்வதேசக் கடற்பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் பதின்மூன்று கப்பல்கள் தொடர்பான தகவல்கள் அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

குறித்த பதின்மூன்று கப்பல்களும் வெளிநாடுகளில் பல்வேறு நாட்டவர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்து புலனாய்வு விசாரணைகளின் போது தகவல்கள் தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தக் கப்பல்கள் இன்னும் தொடர்ச்சியாக சர்வதேசக் கடற்பரப்பில் பயணங்களை மேற்கொண்டிருப்பதுடன்,



அவற்றின் போக்குவரத்து மூலம் பெருந்தொகைப் பணத்தை விடுதலைப் புலிகள் அமைப்பு ஈட்டி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் அந்தக் கப்பல்களைக் கைப்பற்றி இலங்கை அரசாங்கத்துக்கு உரித்தாக்கிக் கொள்வது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்அவர் மேலும் தெரிவித்தார்.

# 1922மில்லியன் பெறுமதியான கால்நடைகள் அழிவடைந்தன

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கிழக்குமாகாணத்தில் மட்டும் 1922 மில்லியன் ரூபா பெறுமதியான கால்நடைகள் அழிந்து போயுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு,திருகோணமலை, அம்பாறை,பொலனறுவை ஆகிய மாவட்டங்களிலேயே வெள்ளத்தினால் கால்நடைகளுக்குப் பெருமளவு அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

இங்கு சுமார் 124,000 மாடுகள் 33,375 எருமைகள், 46,500 ஆடுகள், 319,250 கோழிகள் என்பன வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டு இறந்து போயுள்ளன.

இதன் காரணமாக இந்த மாவட்டங்களில் பால்,இறைச்சி, முட்டை போன்ற உணவுப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இந்தக் கால்நடைகளின் அழிவுகளில் இருந்து இந்த மாவட்டங்கள் மீள்வதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சஜித்மீது ஒழுக்காற்று விசாரணை

# கோரிக்கை விடுக்கின்றார் ரவி எம்.பி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டுமென கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.





உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர் தெரிவுக் கூட்டத்தின் போது சஜித் பிரேமதாஸ இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தியதாக ரவி கருணாநாயக்க குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கையினால் கட்சிக்கும் தமக்கும் அபகீர்த்தி ஏற்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த சம்பவம் இடம்பெற்ற போது கட்சியின் தலைவர், பிரதித் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பிரசன்னமாகியிருந்தாக அவர் குறிப்பிட்டார்.

எனவே சஜித்திற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# வெள்ள அனர்த்தத்தை ஈடுசெய்ய 600 மில்லியன் டொலர் தேவையாம்

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட இரண்டு வெள்ளப்பெருக்குகளினாலும் ஏற்பட்ட சேதங்களுக்கு 600 மில்லியன் டொலர் நிதி தேவைப்படுவதாக அரசாங்கம் கூறியுள்ளது.

கடந்த மாதமும் இந்த மாதத் தொடக்கத்திலும் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் 64 பேர் கொல்லப்பட்டனர். ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

வெள்ளத்தினால் சேதமடைந்துள்ள பிரதான வீதிகளைத் திருத்தியமைக்கவும். சேதமடைந்த 50,000 வீடுகளைப் பழுது பார்க்கவும் அரசாங்கம் 33 பில்லியன் ரூபாவை (300 மில்லியன் டொலர்) ஒதுக்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அரசாங்க நிதியைக் கொண்டு இந்த நிதிஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பல தசாப்தப் போரினால் இடம்பெயர்ந்து அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களே மீளவும் வெள்ளத்தினால் அதிகளவு இடம்பெயர்ந்தனர்.

வெள்ளத்தினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள அறுவடை இழப்பு 13 பில்லியன் ரூபாவாகும்.

இந்த இழப்பீட்டை முழுமையாக விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணங்கள் வழங்க 51 மில்லியன் ரூபாவை வழங்குமாறு அனைத்துலகத்திடம் ஐ.நா வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஐ.நாவின் வேண்டுகோளில் சுமார் 20 வீதமானதை ஈடு செய்யப் போதுமான நிதியுதவியே கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வடபகுதிக்கான மூன்று ரயில்பாதை அடுத்தமாதம் புனரமைக்கப்படுகிறது

(கொழும்பு)

வடபகுதியில் மூன்று ரயில் பாதைகளைப் புனரமைக்கும் வேலைகள் அடுத்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தியாவின் நிதியுதவியுடன் ஓமந்தை - பளை, மதவாச்சி-மடு, மடு-தலை மன்னார் ஆகிய ரயில் பாதைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தப் புனரமைப்புப் பணிகளை இந்திய அரசு நிறுவனமான 'இர்கோன்' மேற்கொள்ளவுள்ளது.

இதற்கென 200 பொறியியலாளர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்படவுள்ளதாக 'இர்கோன்' நிறுவனத்தின் இலங்கைக்கான பொது முகாமையாளர் குப்தா தெரிவித்தார்.

ஏற்கனவே 20 இந்திய பொறியியலாளர்கள் மதவாச்சிக்குச் சென்றுள்ளனர்.

முழுஅளவிலான புனரமைப்பு வேலைகள் மார்ச் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இந்தப் பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர்.

200 பொறியியலாளர்கள் மட்டும் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்படுவர்.

அதே எண்ணிக்கையிலான பொறியியலாளர்கள் இலங்கையிலும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நவீன தொழில்நுட்பத்துடன் காலி-மாத்தறை இடையிலான ரயில் பாதையை 'இர்கோன்' நிறுவனம் புனரமைத்துள்ளது.

அதுபோன்ற அல்லது அதைவிட அதிகமான தரத்துடன் வடபகுதிக்கான ரயில் பாதைகள் புனரமைக்கப்படும்.

இதன்மூலம் அதிக வேகத்தில் தொடருந்துகளை இயக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தப்பியோடிய இராணுவத்தினரை கைது செய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் சரணடைவதற்காக வழங்கப்பட்ட மன்னிப்புக் காலம் முடிவடைந்துள்ள நிலையில் இதுவரையில் சரணடையாதோரைத் தேடிக் கைது செய்வதான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

இதேவேளை,இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை மீண்டும் வந்து இணையுமாறு வழங்கப்பட்ட மன்னிப்புக் காலப்பகுதிக்குள் 11 இராணுவ உத்தியோகத்தர்கள் உட்பட 4,827 பேர் இணைந்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இந் நிலையில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய பன்னிரண்டு இராணுவ உத்தியோகத்தர்கள் உட்பட 4,642 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறிய இராணுவப் பேச்சாளர் அவர்களுக்கு எதிராக இராணுவ சட்டத்துக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

# ஓய்வூதியம் வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்பின்படி ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும் என மாகாண சபை உறுப்பினர்களின் கூட்டிணைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்துக் கட்சிகளினதும் மாகாண சபை உறுப்பினர்களையும் கூட்டிணைப்பாகக் கொண்ட அமைப்பின் விசேட ஊடகவியலாளர் மாநாடு தம்புள்ளையில் இடம்பெற்ற போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உறுப்பினர்கள் கடந்த 22 வருட காலமாக எந்தவிதமான சலுகையினையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். மத்திய கல்லூரி பரபரப்பான வெற்றி



நிரோஜ்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் பரபரப்பானவேளையில் ஐந்து விக்கெட்டுக்களால் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரு அணிகளின் 19 வயதுப் பிரிவினருக்கிடையில் நடைபெற்ற சிநேகபூர்வப் போட்டியிலேயே யாழ். மத்திய கல்லூரி அணி மேற்படி வெற்றியைப் பெற்றது.

இரண்டு நாட்களைக் கொண்ட இந்த இனிங்ஸ் போட்டி கடந்த 11, 12ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 313 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் நிரோஜ் 51, யூலியஸ் கனிஸ்டன், எரிக் பிரசாத் ஆகியோர் தலா 48, வாதுசனன் 46, எட்வேட் எடின் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உத்தமகுமரன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உத்தமகுமரன் 49, திவாகர் 30, சுஜிதரன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வாதுசனன் நான்கு, கோகுலன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

146 ஓட்டங்கள் பின்னிலையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இருந்தமையால் மீண்டும் துடுப்பாடப் பணிக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்சிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பங்குஜன் 79, உத்தமகுமரன் 32, ஜனதாஸ் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தர்சன் ஆறு, கோகுலன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற 93 ஓட்டங்கள் தேவைப்பட்டது. போட்டி நிறைவடையும் வேளை வந்தமையால், 14 ஓவர்கள் வீசப்படும் என நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி அதன் சிறப்பான அதிரடி ஆட்டத்தின் மூலம் 10.4 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வாதுசனன் 26, தர்சன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் கோகுலன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜனதாஸ், சாம்பகன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்)

## யாழ்ப்பாணத்திலும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி இம்முறை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி விஜய ரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எமது செய்தியாளருக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ் விளையாட்டுப் போட்டிகளில் பெண் ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 19,20ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை வலைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டிகளில் 18 அணிகள் பங்குபற்றவுள்ளதாகவும், இப்போட்டிகளுக்கான நடுவர்களை ஒழுங்கு செய்து தருமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க அந்த ஒழுங்குகளைச் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (மி)

## மீண்டுமா?



(பெங்களூர்)

பயிற்சி ஆட்டத்தின் போது இந்திய வேகப்பந்து வீச்சாளர் சிறிசாந்த்துக்கும், அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங்குக்கும் இடையே இரு முறை சிறிய வாக்குவாதம் ஏற்பட்டது.

10ஆவது ஓவரை வீசிய போது சிறிசாந்த் ஏதோ சொல்ல, பொண்டிங்கும் பதிலுக்கு வசைபாடினார். பின்னர் அடுத்த பந்தில் பொண்டிங்குக்கு ஆட்டமிழப்புக் கோரி பலமாக முறையிட்ட போது, நடுவர் அதை மறுத்து விட்டார். அப்போது சிறிசாந்த் தனது கையைக் காட்டி ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.

இவ்வாறு சிறிசாந்த் ஈடுபடுவது ஒன்றும் புதியதல்லதென சில விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# வெற்றிக் கிண்ணம் சுவீகரிப்பு



(பாரிஸ்)

பாரிஸ் ஓப்பன் ரென்னிஸ் வெற்றிக் கிண்ணத்தை செக் குடியரசின் பெட்ரா கிவிடோவா சுவீகரித்துக் கொண்டார்.

பிரான்சில் நடந்த பாரிஸ் ஓப்பன் பெண்கள் ரென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் புதிய முதல் நிலை வீராங்கனை பெல்ஜியத்தின் கிம் கிலிஸ்டர்ஸ், செக்குடியரசின் பெட்ரா கிவிடோவாவுடன் நேற்று முன்தினம் மோதினர்.

ஒரு மணி நேரம் நடந்த இந்த ஆட்டத்தில் அவுஸ்ரேலிய ஓப்பன் சம்பியனான கிலிஸ்டர்ஸ் கிவிடோவாசிடம் 4-6, 3-6 என்ற நேர் செட்டில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். கிவிடோவாவுக்கு இது மூன்றாவது சர்வதேச பட்டமாகும்.

கிவிடோவாவின் வெற்றியில் எனக்கு ஆச்சரியமில்லை. அவர் சிறப்பாக விளையாடக்கூடியவர் என்பது எனக்குத் தெரியும். எனக்கு சிறிய கழுத்து வலி இருந்தது. ஆனால் தோல்விக்கு இதனைக் காரணமாகச் சொல்லமாட்டேன். இந்த வெற்றிக்கு கிவிடோவா தகுதியானவர் என்று தோல்விக்குப் பின்னர் கிலிஸ்டர்ஸ் கூறினார்.





டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை (800) வீழ்த்திய இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை சுயசரிதைப் புத்தமாகி விரைவில் வெளிவரவுள்ளது.

"800" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தச் சுயதரிசைப் புத்தகம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் விற்பனைக்கு விடப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# ரசிகர்கள் ஆர்ப்பாட்டத்தில்...

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் போது ரசிகர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அம்பாந்தோட்டையில் இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை, கனடா அணிகளுக்கு இடையிலான போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டு நேற்று விநியோகிக்கப்பட்டது. அனைத்துப் போட்டிகளுக்குமான நுழைவுச் சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதாகக் கூறி பெருந்திர



ளான ரசிகர்கள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு முன்பாக நேற்றுக் கூடியிருந்தனர். அதன்போது தங்களுக்கான நுழைவுச் சீட்டுகள் வழங்கப்படாததைக் கண்டித்து அவர்கள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

# காயத்துடன் கூடிய ஆபத்தான அணி

(டாக்கா)

கிரிக்கெட்டில் நாங்கள் காயம்பட்ட அணி ஆனால் ஆபத்தான அணி என்று அக்தர் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:


வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது ஆசிப், முகமது ஆமிர் ஆகியோர் எங்களுடன் இங்கு (சூதாட்டத்தால் தடை விதிக்கப்பட்டவர்கள்) இல்லாதது துரதிர்ஷ்டவசமானது. ஆனாலும் போட்டிகளில் வெற்றி தேடித்தரக்கூடிய திறமையான வேகப்பந்து வீச்சாளர்கள் போதுமான எண்ணிக்கையில் அணியில் இருக்கிறார்கள். என்னுடன் உமர் குல், வகாப் ரியாஸ், ஆகியோருடன் ஜுனைட் கானும் உள்ளார். எங்களால் உலகின் எந்த அணியையும் கட்டுப்படுத்த முடியும். பந்து வீச்சில் ஸ்விங் செய்வது எங்களது பலம். குறிப்பாக பந்து தேய்ந்து பழசான பிறகும் ஹரிவர்ஸ்ஸ்விங்"



செய்வது எங்களது சிறப்பு.

எனது 26 வயதில் பந்து வீசியதற்கும், 36 வயதில் பந்து வீசுவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. இப்போது நிறைய அனுபவம் பெற்றிருக்கிறேன். அதே சமயம் இன்னும் என்னால் வேகமாக பந்து வீச முடியும். மணிக்கு 145 முதல் 150 கிலோமீட்டர் வேகம் வரை என்னால் எளிதாக பந்து வீச முடியும்.

பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு இது முக்கியமான கட்டம் எனவே சிறந்த சூழலை உருவாக்க எந்த விலையைக் கொடுத்தாவது வெற்றி பெற வேண்டும் என்றார்.





## உலகக் கிண்ணக் கிரிக்கெட்

# பனிவிழும் மலர்வனம்

இம்ரான்கான் உங்களுடன் பேசுகிறார். அணிகளின் பலம், பலவீனத்துக்கு அப்பால் போட்டி முடிவுகளை நிர்ணயம் செய்வதில் செல்வாக்குச் செலுத்தப்போகும் இயற்கை பற்றிப் பேசுகிறார். இந்த உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் காலம் பனியும், குளிரும் நிறைந்த காலமாக இருப்பதால் இரவு பகல் ஆட்டத்தில் இரண்டாவதாக களத்தடுப்பு செய்பவர்கள் பாதகமான சூழ்நிலையை எதிர்கொள்வார்கள் என்றார். இவர் இதற்கு உதாரணமாக 1996 இல் அவுஸ்ரேலியாவை இலங்கை தோற்கடித்துக் கிண்ணம் வென்றபோதும் இரண்டாவதாக இலங்கை துடுப்பெடுத்தாடியதே அவுஸ்ரேலிய வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது என்கிறார். அதாவது மைதானம் பனியால் ஈரமடைந்து விடுவதால் களத்தடுப்பின் போது வீரர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாவதும், சிறப்பாக நனைந்த பந்தைப் பந்து வீச்சாளர்கள் தம் எண்ணப்படி வீச முடியாமல் போவதும் மிகவும் பாதகமான நிலைக்குக் களத்தடுப்பு அணியைக் கொண்டுபோகும் என்பது இவரின் கிரிக்கெட் அனுபவத்தின் மூலம் பெறப்பட்ட முடிவு. இம்முறை நடைபெறவுள்ள உலகக் கிண்ண மொத்தப் போட்டிகள் 49இல் முப்பத்தாறு போட்டிகள் பகல் இரவு ஆட்டங்களாக நடைபெறவுள்ளன. அதோடு காலிறுதிப் போட்டி தொடங்கி இறுதிப் போட்டி வரையான ஏழு போட்டிகளும் பகலிரவுப் போட்டிகளே. இப்படியெல்லாம் பல விடயங்களை அலசிக் கொண்டிருக்கையில் ஞாயிறு நடைபெற்ற இந்திய - அவுஸ்ரேலிய பயிற்சி பகல் இரவு போட்டிகளில் நிலைமை தலைகீழாகப் போய்விட்டது. பொதுவான கருத்துக்கு மாறாக, இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியாவை பந்தாடிவிட்டார்கள் இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள். அவர்களிலும் பியூஸ் சால்வா ஒரு அதிசயம். எனவே, இலக்கணத்தை மாற்றியமைத்தது இந்தியா. இந்தியாவுக்காகத்தான் இந்தத் தலைப்பும் போடப்படுகிறது.



**தினமொரு தகவல்**

ICC Cricket World Cup 2011

# பெனாசிர் கொலை வழக்கு தொடர்பாக முஷாரப்பை ஒப்படைக்குமாறு கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலை தொடர்பான விசாரணைக்காக, முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு பிரிட்டனிடம் பாகிஸ்தான் அரசு கோரிக்கை விடுக்கவுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பெனாசிர் பூட்டோ ராவல்பிண்டியில் நடந்த தேர்தல் பிரசார பேரணியின்போது தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கு தற்போது ராவல் பிண்டியில் உள்ள தீவிரவாத தடுப்பு நீதிமன்றில் நடந்து வருகிறது. தற்போது இந்த வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் பெயரும் இடைக்கால குற்றப பத்திரிகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏனெனில் பெனாசிர் கொலை செய்யப்பட்ட போது, முஷாரப் ஜனாதிபதியாக இருந்தார். அவருக்கு உரிய பாதுகாப்பு அளிக்க அவர் தவறி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இந்தநிலையில், தீவிரவாத தடுப்பு நீதிமன்றில் விசாரணைக்காக முஷாரப் தொடர்ந்து ஆஜராகவில்லை. எனவே, அவர் விசாரணைக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை என அரசின் சிறப்பு சட்டத்தரணி குற்றம் சாட்டினார்.

இதைத்தொடர்ந்து முஷாரப்பை கைது செய்ய பிடிவாரண்டு பிறப்பித்து நீதிமன்றம் உத்தர விட்டது. இதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது. ஜனாதிபதி பதவியை இழந்தபின் தற்போது முஷாரப் லண்டனில் தங்கியுள்ளார். மேலும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான ஒப்பந்தத்தை இதுவரை இங்கிலாந்துடன் பாகிஸ்தான் செய்து கொள்ள வில்லை. எனவே, அவரை பாகிஸ்தான் கொணடு வருவது அவ்வளவு எளிதான காரியமல்ல. எனவே, பெனாசிர் கொலை வழக்குக் குறித்து விசாரணை நடத்துவதற்காக முஷாரப்பை தங்களிடம் ஒப்படைக்கும்படி இங்கிலாந்திடம் பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து இங்கிலாந்து உள்துறை செயலாளருக்கு கடிதம் எழுதப்பட உள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தலைமையில் நடந்தது. இரு நாடுகளுக்கும் இடையே கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் இல்லாததால் முஷாரப்பை பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்த முடியாது என அவரது சட்டத்தரணி முகமது அலி சபீப் தெரிவித்துள்ளார்.

மேலும் பெனாசிர் கொலை வழக்கில் தன்மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும் முஷாரப் மறுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# இராணுவத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து வீடு திரும்புகின்றனர் எகிப்திய மக்கள்



(கெய்ரோ)

எகிப்தில் அரசியல் சட்டத்தை இடைநிறுத்துவதெனவும், நாடாளுமன்றை உடனடியாகக் கலைப்பதெனவும், இராணுவம் உறுதிமொழி வழங்கியதை அடுத்து தக்ரீர் சதுக்கத்தில் போராட்டம் நடத்த வந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

எகிப்தில் முபாரக்கின் ஆட்சி முடிவு கண்ட நிலையில் அங்கு குறைந்தது ஆறுமாதம் அல்லது தேர்தல் நடைபெறும் வரை இராணுவ ஆட்சி நடத்தப்படுமெனவும் உயர்மட்ட இராணுவ சபை தெரிவித்தது.

இதேவேளை, எகிப்தில் அமைதி நிலையை ஏற்படுத்த போராட்டக் காரர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு இராணுவம் அறிவுறுத்தி வருகின்றது.

அத்துடன், கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் இராணுவம் தடை விதித்துள்ளது.

இதேவேளை, எகிப்தில் நாடாளுமன்றம் கலைப்பு, அரசியல் சாசன முடக்கம் என்பனவற்றை இராணுவம் அறிவித்துள்ளதனை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் இஸ்ரேலிய பிரதமர் பென்ஜமின் நித்தன்யாகு இருவரும் வரவேற்றுள்ளனர்.




## இரண்டு தலைகளுடன் குழந்தை



இந்தானேஷியாவின் பக்தி ஆஷ் வைத்தியசாலையில் அண்மையில் பிறந்த ஒரு குழந்தை இரண்டு தலைகளுடன் ஒட்டிப் பிறந்துள்ளது. டிமான் வயது 40, டானிரோ வயது 35 ஆகிய தம்பதியினரின் நான்காவது பிள்ளையாக இந்தக் குழந்தை பிறந் துள்ளது. இன்கியுபேடர் கருவியில் இந்தக் குழந்தை வைக்கப்பட்டுள்ளது. இரண்டு கை கால்கள், இரண்டு முதுகெலும்பு, ஒரு மார்பு, ஒரு வயிறு என்பனவற்றுடன் இந்தக் குழந்தை பிறந்துள்ளது.

## செங்குத்தாக விமானம் வீழ்ந்து விபத்து அறுவர் உயிரிழப்பு, அறுவர் உயிர்பிழைப்பு



(லண்டன்)

தரையிறங்கும் வேளை செங்குத்தாக விமானம் வீழ்ந்ததில் விமானி உட்பட ஆறுபேர் உயிரிழந்துள்ளதுடன், ஆறு பேர் உயிர் தப்பிய அதிசயமொன்று பிரிட்டனில் இடம்பெற்றது.

பெல்பாஸ்டிலிருந்து கோர்க் நோக்கிச் சென்று கொண்டிருந்த குறித்த பயணிகள் விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

பிரிட்டனைச் சேர்ந்த அன்றூகேன்டல் 27 வயது அவரின் சக விமானி ஸ்பெயினைச் சேர்ந்த 31 வயதான ஜோர்டி லோபஸ் ஆகியோரே மரணமடைந்த விமானிகளாவர். இந்த விபத்தில் ஆறு பேர் உயிர் தப்பியும் உள்ளனர்.

இவர்களுள் இருவருக்கு எந்தக் காயங்களும் ஏற்படவில்லை. விமானம் செங்குத்தாக வந்து தரையில் வீழ்ந்துள்ளது.

இதில் சிலர் உயிர் தப்பியுள்ளமை அதிசயமே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# குறள் சொல்லும் கதைகள் -28

## இன்பத்துப் பால்

## இனிமையான செயல்

"கடிதத்தைக் கொண்டு சென்று கொடுப்பதில் எந்த விதமான பிரச்சினையும் எனக்கு இல்லை. இன்றைய இளைஞர்களை நம்பி எந்தக் காரியங்களிலும் ஈடுபடக் கூடாது. உன்னை நான் நம்புறன். நீ வல்லவன்: நேர்மையானவன்: அவளை ஏமாற்ற மாட்டாய் என்று எனக்குத் தெரியும். இருந்தபோதும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் எந்த மனிதனும் மாறலாம். அப்படி நீ மாறினால் வித்தியா என்னைக் கொன்று போடுவாள்" கஜேந்திரனின் கதை நகுலனுக்கு ஆத்திரத்தை வரவழைத்தது. ஆத்திரத்துடன் குறுக்கிட்டான். "நீ உதவி செய்ய முடியாவிட்டால் உதவி செய்ய மாட்டன் என்று சொல்லுவதை விட்டு விட்டு கற்பனை பண்ணிக் கதை சொல்லாதை" என்றான் நகுலன்.

"நான் கற்பனை பண்ணிச் சொல்லவில்லை. இன்றைய நிலையைச் சொல்லுறன். சென்ற வருடம் பல்கலைக்கழகத்தில் எம்முடன் படித்த பிரசாந்தன் கலைமகளை ஏமாற்றியபடியால் அவள் தற்கொலை செய்ய முயற்சித்தவள். பிறகு தப்பி மனநோயாளி மாதிரி இருக்கிறாள். பெற்றோரின் கரைச்சலுக்காகச் சிலர் மனம் மாறுவினை. சிலருக்கு காதல் ஒரு பொழுது போக்கு. பல்கலைக் கழகத்திலை படிக்கு மட்டும் பொழுது போக்கு காதலிப்பினை, படிப்பு முடிந்த பிறகு அந்த நினைவே வராது. உன்னை நம்புறன். ஆனால் பெற்றோர் விரும்பா விட்டால் என்ன செய்வாய். அர்ச்சகா மிகவும் அழகானவள். அந்தக் கவர்ச்சியில் மயங்கிற நீ கடைசி வரையும் அவளை மறக்க மாட்டாய் என்று நான் எப்படி நம்புவது" என்று கேட்டு விட்டுச் சில கணங்கள் எதுவும் பேசாமல் நகுலனின் முகத்தைப் பார்த்தான் கஜேந்திரன்.

நகுலனின் முகத்தில் உள்ள உணர்வுகளை கஜேந்திரனால் புரிந்து கொள்ள முடியவில்லை. "இந்த உலகத்தில் காதலில் வெற்றியடையும் பாதை தான் மிகவும் கரடு முரடானதாகவும் செங்குத்தாகவும் இருக்கிறது. அந்தப் பாதையில் பலர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். பலர் தோல்வியடைந்து விழுந்து போனதில் ஆச்சரியம் இல்லை. பலமுறை இடறி விழுந்தாலும் காதலில் வெற்றி பெறுபவன் தான் வாழ்க்கையில் வெற்றி பெற்றவனாவான்" என்றான் கஜேந்திரன்.

"நீ எனக்கு உபதேசம் செய்யாதை. நான் அர்ச்சகாவை விரும்புறன். அவளை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிட மாட்டன். ஆயிரம் தடைகள் வந்தாலும் அதை உடைத்தெறிய என்னால் முடியும்" ஆவேசமாகச் சொன்னான் நகுலன்.

"நீ சொல்வதை நான் நம்புறன். கடைசி வரையும் உறுதியாக இருந்தால் சரி" என்றான் கஜேந்திரன்.

"உன்னுடைய பேச்சைப் பார்த்தால், உனக்கு என்னில் நம்பிக்கை ஏற்படவில்லை என்று தெரிகிறது. உனக்கு விருப்பமில்லா விட்டால் அவள் என்னை விரும்புகிறாளா என்று அறிவதற்காக நான் தரும் கடிதத்தைக் கொண்டு சென்று கொடுத்து விட்டு அவளின் பதில் கடிதத்தை வாங்கி வந்து தா" என்று சலிப்புடன் சொன்னான் நகுலன்.

"நாம் ஒரு பெண் மீது கொள்ளும் காதல் சிறந்ததாகவும் தூய்மையுடையதாகவும் இருந்தால் தான் வாழ்க்கையும் சிறந்ததாகவும் தூய்மை உடையதாகவும் இருக்க முடியும். காதல் கொண்ட அறிவுள்ள பெண்ணும் பேதையாகி விடுவாள். ஆரம்பத்தில் கதைத்துச் சிரித்த நான், நாள் செல்லச்செல்ல அவளுடன் நெருக்கமாகப் பழகுவேன். சில நாட்கள் அன்புடன் பழகிய ஆணைப் பெண் இலகுவில் நம்பி விடுவாள். இதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். காதலரிடையே நம்பிக்கையின் அடிப்படையில் பலவும் நடக்கும். காற்றுக் கூட இருவருக்கும் இடையே புகுந்து செல்ல முடியாத படி தழுவும் தழுவல், ஒருவரை ஒருவர் விரும்பிய காதலர் இருவருக்கும் இனிமை உடைய செயலாகும். அந்த அணைப்புத் தரும் சுகத்திற்கு எல்லையே இல்லை. அப்படி அணைத்து இன்பத்தைப் பெற்றால் அவளைத் திருமணம் செய்ய வேண்டும்" என்றான் கஜேந்திரன்.

நகுலன் எதுவும் பேசாமல் சிலை போல இருந்தான்.

**கே.வி.குணசேகரம்**

வீழும் இருவர்க்கு இனிதே வளி இடை
போழப் படாஅ முயக்கு. (குறள் 1108)

காற்றுக் கூட இடையே புகுந்து செல்லாத படி நெருங்கி அணைத்து மகிழ்வது, ஒருவரை ஒருவர் விரும்பிய காதலர் இருவருக்கும் இனிமையானதாகும்.

# போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மறுவாழ்வுப் பணிகளை விரைவுபடுத்துக

## இந்திய சபாநாயகர் மீராகுமார் வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான் சந்திப்பின் போது, போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மறு வாழ்வுப்பணிகளை விரைவாக முடிவுறுத்துமாறு கேட்டுக் கொண்டதுடன், தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவம் குறித்துக் கலந்துரையாடினேன் என இந்திய நாடாளுமன்றச் சபாநாயகர் மீரா குமார் தெரிவித்தார்.

கொழும்பில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

நாடாளுமன்றில் உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக குரல் எழுப்பும் போது கூச்சல்-குழப்பம் ஏற்படுவதுண்டு. அந்தச் சமயத்தில் உறுப்பினர்கள் சுய கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள சபாநாயகர் உற்சாகப்படுத்த வேண்டும். அதை விடுத்து உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் இருந்து மிக எளிதாக வெளியேற்ற உத்தரவிடக்கூடாது.

நாடாளுமன்றத்தில் நான் ஒரு போதும் சபைக் காவலர்களை பயன்படுத்த விரும்பியதே இல்லை. மக்கள் தங்கள் நீண்ட நாள் பிரச்சினைகளை வெளியிடும் களமாக நாடாளுமன்றம் உள்ளது. மக்கள் தங்கள் மனதில் அடக்கி வைத்துள்ள பிரச்சினைகளுக்கு நாடாளுமன்றத்தில் தீர்வு காணப்பட வேண்டும்.



நாடாளுமன்றத்தில் நாம் அதற்கு அனுமதி கொடுக்காவிட்டால், எகிப்து நாட்டில் மக்கள் மனதில் இருந்த உணர்வு வெடித்தது போல வெடித்து விடும். கிரிமினல்கள் உறுப்பினர்களாவதைத் தடுக்க சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும். ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் நாடாளுமன்றம் சுமுகமாக நடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை நான் எதிர்க்கட்சிகளுடன் 3 சுற்றுப் பேச்சு நடத்தி விட்டேன். சபை சுமுகமாக நடக்கும் என்ற நம்பிக்கையுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.




# சிறுநீரக நோயால் பத்து இலட்சம் பேர் இந்தியாவில் பாதிப்பெனத் தகவல்

(பொள்ளாச்சி

இந்தியாவில் பத்து இலட்சம் மக்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்படுவதாக கோவை மருத்துவக் கல்லூரியின் பீடாதிபதி விமலா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தியாவைப் பொறுத்த வரை மக்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு வகையிலும் மாற்றம் வந்துள்ளது. ஆனால், தரமான வாழ்க்கை குறித்து விழிப்புணர்வு கிடைக்காததால், பல் வேறு நோய்களுக்கு உள்ளாகின்றனர்.

இதில் நீரிழிவு நோய், உயர இரத்த அழுத்தம், புற்றுநோய் உள்ளிட்ட நோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். உயர் இரத்த அழுத்தம், மன அழுத்தம் காரணமாக ஏற்படுகிறது. முதியவர்கள் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

இருதய நோயினால், ஆண்டுக்கு 25 லட்சம் பேருக்கு அறுவை சிகிசசை தேவைப் படுகிறது. ஆனால், இந்தியாவில் ஒரு லட்சம் மக்கள் மட்டும் அதைச் செய்து கொள்ள முடிகிறது. இந்த அறுவை சிகிச்சையும், மருத்துவ செலவும் அதிகமாக இருப்பதால், மக்கள் முன்வருவதில்லை. ஆண்டுக்கு 10 லட்சம் மக்களுக்கு புற்று நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதில், ஐந்து லட்சம் மக்கள் இறக்கின்றனர்.

பெரும்பாலானவர்கள், நோய் முற்றிய நிலையில் காணப்படுகின்றனர். மேலும், ஐந்து லட்சம் மக்கள் சோதனை செய்து கண்டறியும் நிலையில் உள்ளனர். ஆரம்ப நிலையிலேயே இந்நோய் கண்டு பிடிக்கப்பட்டால், குணப்படுத்த முடியும். ஆனால், இது குறித்துத் தெரிந்து கொள்ள முடிவதில்லை.

நாட்டில், 10 லட்சம் பேர் சிறுநீரக கோளாறினால் பாதிக்கப்படுகின்றனர். இதில், ஒரு லட்சம் பேருக்கு சிறுநீரகம் செய லிழக்கிறது. இவர்களில், ஐந்தாயிரம் பேர் மட்டுமே சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்கின்றனர். மீதமுள்ள 95 ஆயிரம் மக்கள் சிறுநீரக அறுவை சிகிச்சை செய்ய முடியாமல் தவிப்புக்குள்ளாகின்றனர்.

நோய் வருவதற்கு முன் பாதுகாத்துக் கொள்வது அவசியம். தமிழக அரசு 200 கோடி ரூபாய நோய் வருவதற்கு முன்காத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஒதுக்குகிறது. இதில், நூறு கோடி ரூபாய் புற்றுநோய்க்கும், நூறு கோடி ரூபாய் இருதயம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் ஒதுக்குகிறது. நோய்களை தவிர்க்க, உடற்பயிற்சி, யோகா போன்றவை தேவைப்படுகிறது. இதன மூலம் மன அழுத்தத்தை தவிர்க்க முடியும்.மனம், உடல் ஆகியவை புத்துணர்வு பெறும். மக்களும் நோய்ப் பாதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# விமான நிலையங்களின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டுமென அறிவுறுத்து

(புதுடில்லி)

இந்திய விமான நிலையங்களின் பாதுகாப்பை பெருமளவு அதிகரிக்க வேண்டும் என, சிவில் விமானபோக்குவரத்து பாதுகாப்பு அமைப்பு (பி.சி.ஏ.எஸ்.,) அறிவுறுத்தியுள்ளது.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள டெமோடிடோவா விமான நிலையத்தில், கடந்த மாதம் பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 30 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, இந்திய விமான நிலையங்களில், பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்று சிவில் விமான போக்குவரத்து பாதுகாப்பு அமைப்பு, விமான நிலைய அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, இந்தியாவில் உள்ள அனைத்து விமான நிலையங்களின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதில், விமான நிலைய் நுழைவாயில், வாகனங்கள் நிறுத்துமிடம் உட்பட அனைத்துப் பகுதிகளிலும், கண் காணிப்புக் கமராக்களை நிறுவி, அங்கு நடமாடும் ஒவ்வொருவரையும் கண்காணிக்க வேண்டும்.விமானம் புறப்படும், இறங்கும் இடங்களில், பயணிகள் தவிர வேறு யாரையும் அனுமதிக்கக்கூடாது.

பார்வையாளர்களை விமான நிலையத்திற்குள் அனுமதிப்பதில் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

விமான போக்குவரத்து பாதுகாப்புக் குறித்து, "பிராந்திய விமான போக்குவரத்து பாதுகாப்பு மாநாடு" டில்லியில் இன்று தொடங்கி, நான்கு நாட்கள் நடக்கிறது. அமெரிக்காவின் சர்வதேச விமானபோக்குவரத்துக் கழக ஆதரவுடன் நடக்கும் இந்த மாநாட்டில், விமான நிலையங்களில் பாதுகாப்புப்பணிகளின் போது கடைப் பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பாதுகாப்புவழி முறைகள் குறித்து ஆலோசனை நடத்தப் பட உள்ளது.

# காதலர் தின வாழ்த்து அட்டைகளை கிழித்தெறிந்த இந்து மக்கள் கட்சி

(சென்னை)



காதலர் தினமான நேற்று சென்னை கடற்கரையில் காதலர் தின வாழ்த்து அட்டைகளை, இந்து மக்கள் கட்சியினர் கிழித்து எறிந்ததுடன், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதில் ஈடுபட்ட இந்து மக்கள் கட்சியினர் கூறுகையில், காதலர் தினத்தில் காதலர் என்ற பெயரில் கடற்கரையில், நட்சத்திர ஹோட்டல்களில் ஆபாச முத்தக் காட்சிகள் கூடிய வாழ்த்து அட்டைகள் பரிமாற்றம் இந்துக் கலாசாரத்திற்கு எதிரானதாகும்.

இதனைக் கண்டித்து இந்து மக்கள் கட்சி சார்பில் காதலர் தினத்தைக் கண்டித்து, காதலர் தின வாழ்த்து அட்டைகளை கிழிக்கும் ஆர்ப்பாட்டம் நடத்தினோம் என்றனர். பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.


உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தினமுரசில்

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது.
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி
எமக்கு அனுப்பி வையுங்கள்.
தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



அனுப்பவேண்டிய முகவரி:
தினமுரசு
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..............................
பெற்றோர் கையொப்பம்

# எதிர்கால ஆபத்துக்களுக்காக எம் மீது குற்றம் சாட்ட வேண்டாம்

## ஐ.தே.க எம்.பி அகிலவிராஜ்



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிப்பதன் மூலம் ஏற்படப்போகும் ஆபத்துக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மீது மக்கள் குற்றஞ்சாட்டக் கூடாதென ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

மக்களை ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இதற்கு அவர்கள் எதிர்காலத்தில் முகம் கொடுப்பரென்பதுடன் அவர்களால் இதனை மறுக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

பணவீக்கம் காரணமாக எதிர்காலத்தில் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பரெனவும் எதிர்வரும் மாதங்களில் நாட்டில் பணவீக்க நிலைமை மேலும் அதிகரிக்குமெனவும் அகிலவிராஜ் குறிப்பிட்டார்.

தேர்தலின் பின்னர் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வடையுமெனவும் குறிப்பிட்ட அவர் அண்மையில் வெளியான 5,000 ரூபா நாணயத்தாள் உட்பட வெளியான நாணயத்தாள்கள் பணவீக்கத்தை நிச்சயமாக அதிகரிக்குமெனவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மக்கள் அவசர நிலைமைக்கு முகம் கொடுப்பார்கள். அத்துடன் மக்களை வீதிகளுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையே அவர்கள் மேற்கொண்டுள்ளதாகவும் மற்றுமொரு எகிப்து போன்று இலங்கையும் வரலாமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குஞ்சுக்குளம் பகுதிக்கான போக்குவரத்துப் பாதிப்பு

(மன்னார்)



குஞ்சுக்குளம் பிரதான வீதியுடனான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் மக்கள் குஞ்சுக்குளத்தில் இருந்து தங்களின் தேவைக்காக வேறு இடத்திற்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும் குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட் தந்தை அசிசி அடிகளார் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக குஞ்சுக்குளத்திற்குச் செல்லும் பிரதான பாதையில் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் பாதை நீர் நிறைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் மக்கள் தங்களின் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாது உள்ளனர். போக்குவரத்துச் செய்வதற்காக காட்டுப் பாதையினை மட்டுமே பயன்படுத்த முடியும். காட்டுப் பகுதியில் யானைகள் அதிகமாகக் காணப்படுவதனால் அப்பாதையினூடாக இரவில் பயணம் செய்ய முடியாதுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சோமாலியக் கடற்கொள்ளையர்கள் குறித்து அதிகம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு



(வவுனியா)

இலங்கையின் கடல் எல்லைப் பகுதிக்குள் சோமாலியக் கடற்கொள்ளையர்கள் வரமாட்டார்கள், அவர்களையிட்டு நாம் அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை என கடற்படைத் தளபதி வைஸ் அட்மரல் சோமதிலக திசநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக் கடற்படையின் தளபதியாகப் பொறுப்பேற்ற இவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கை முடிந்து விட்டது. ஆனாலும் இலங்கைக் கடற்படையின் செயற்பாடுகள் குறைக்கப்படவில்லை. நாட்டைச் சுற்றிய கடற்பகுதியில் நாம் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மிக விரைவில் இலங்கையின் பொருளாதார கடல் எல்லை விரிவாக்கப்படவுள்ளது. ஆகவே கடற்படையை விரிவுபடுத்தவும், கரையோரப் பகுதியில் கண்காணிப்பை மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது.

அனுமதியின்றி யாரும் நாட்டில் இருந்து வெளியே செல்வதையோ நாட்டுக்குள் வருவதையோ தடுப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

கடலோரக் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளோம்.

இதற்காக கரையோரப் பகுதியில் உள்ள கடற்படைத் தளங்களுக்கு இடையில் வலையமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென பாதுகாப்புச் செயலரால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதேவேளை, தரையில் இதுவரை மேற்கொண்டு வந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பொறுப்பை இராணுவத்திடம் கையளிக்கிறோம்.

இலங்கை கடற்படை நீலக்கடற்படை அல்ல, இலங்கை கடற்படை நீலக் கடற்படை என்ற தகுதிநிலையை அடைந்து விட்டதாக சிலர் தவறாக விளங்கப்படுத்தியுள்ளனர்.

அண்மைக்காலத்தில் நீலக்கடற்படை என்ற தகுதிநிலையை இலங்கை கடற்படையால் அடைய முடியும் என்று நான் நினைக்கவில்லை.

இந்தியக் கடற்படை கூட இப்போது தான் நீலக்கடற்படை என்ற தகுதிநிலையை அடைவதற்குத் தயார்ப்படுத்தி வருகிறது.

நீலக்கடற்படை என்பது தமது நாட்டின் கடல் எல்லைக்கும் அப்பால் கப்பல்களை நடவடிக்கையில் ஈடுபடுத்தும் திறன் கொண்டதாக இருக்கும்.

அமெரிக்க மற்றும் பிரித்தானிய கடற்படைகளே நீலக்கடற்படை என்ற தகுதிநிலையைப் பெற்றுள்ளன.

இந்தியக் கடற்படை கூட இப்போதும் பிறவுண் கடற்படையாகவே உள்ளது.

2007 இற்கும் 2009 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை கடற்படையும் விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல்களை மூழ்கடிப்பதற்காக எமது கடற்பகுதிக்கு அப்பால் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

அவை நீலக்கடற்படை நடவடிக்கைகளே தவிர, அதன் மூலம் சிறிலங்கா கடற்படை நீலக்கடற்படையாகவில்லை.

அது ஒரு அதிசயம். உண்மையில் எம்மால் செய்ய முடிந்ததை வேறு கடற்படைகளால் செய்திருக்க முடியாது. நாம் இலக்குகளைத் தேடி இலங்கை கடல் எல்லையில் இருந்து 2000 கி.மீ தொலைவு வரை சென்றோம்.

ஆனாலும் இலங்கைக் கடற்படை நீலக்கடற்படையாக வளர்ச்சி அடைந்து விட்டதாக நான் நினைக்கவில்லை.

கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும், கண்காணிப்பு ஆற்றலை நாம் அதிகரிக்க வேண்டியுள்ளது.

இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் உள்ள எமக்கு பொறுப்புகள் அதிகம் உள்ளன.

போரில் நாம் வெற்றி பெற்ற பின்னர் படகுகள் மூலம் ஆட்கள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுகின்ற பிரச்சினையை சந்திக்க நேரிட்டது. எதிர்பாராத வகையில் நிலைமைகள் மாற்றமடைந்தன. பெருமளவானோர் அவுஸ்ரேலியா நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

ஆனாலும் 2009இன் கடைசியில் கடல்வழியாக ஆட்கள் கடத்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. இதற்காக சில ஏற்பாடுகளை நாம் செய்துள்ளோம்.

இலங்கை அரசும், அவுஸ்ரேலிய அரசும் இராஜதந்திர ரீதியாக இணைந்து செயற்பட்டதுடன்- இரு நாடுகளினதும் கடற்படைகளும் இந்த நிலைமையை இணைந்து கையாண்டன.

இலங்கை கடற்படையின் வைரவிழா ஒரு இராஜதந்திரம்.

அண்மையில் நடத்தப்பட்ட இலங்கை கடற்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நடத்தியது மிகவும் வெற்றிகரமானதொன்று.

இதில் அனைத்துலக கடற்படைகள், தளபதிகள், மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டது மிகப்பெரிய வெற்றி. இது கடற்படை இராஜதந்திரத்தின் ஒரு பகுதி. எமது பிராந்தியத்துக்கு அப்பால் நாம் சென்று விட்டோம் என்று நான் நினைக்கிறேன்.

நாம் இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளின் அதிகாரிகளுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுகிறோம்.

கடற்கொள்ளையரையிட்டுக் கவலையில்லை.

சோமாலியக் கடற்கொள்ளையர்கள் குறித்து கவனத்தில் எடுத்துள்ளோம். ஆனால் அவர்கள் இன்னமும் எமது கடற்பகுதிக்குள் வரவில்லை. அவர்கள் சில இலங்கை மீனவர்களைக் கடத்தியுள்ளனர். இருவரைக் கொன்றுள்ளனர். ஆனால் அது சோமாலியக் கடற்பகுதியில் தான் நடந்துள்ளது.

இது இலங்கையில் இருந்து 350 மைல் தொலைவில், மாலைதீவுக்கு அப்பால், இலட்சதீவுக்கு அருகே இடம்பெற்றது. எனவே நாம் இதுபற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை.

எமக்கருகில் அவர்கள் வருவார்கள் என்று நான் நினைக்கவில்லை.

அப்படி அவர்கள் வந்தால் கூட எமது அனுபவத்தையும் ஆற்றலையும் கொண்டு இலகுவாக சமாளித்து விட முடியும். அவர்களை கையாள்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

இலங்கையின் தெற்கிலும் மேற்கு கடலோரத்திலும் அனைத்துலக கப்பல் பாதையில நாம் எப்போதும் இரண்டு தொடக்கம் மூன்று கப்பல்களைக் கண்காணிப்பதற்காக நிறுத்தியுள்ளோம்.

கிழக்கு மற்றும் வடக்கு கடற்பகுதியில் கூட மிகவும் நல்ல கண்காணிப்பு முறையை கொண்டுள்ளோம். எமது நடவடிக்கைகளை நாம் குறைக்கவில்லை. இவற்றைத் தாண்டி சோமாலியக் கடற்கொள்ளையர்கள் எமது கடல் எல்லைக்குள் வருவார்கள் என்று நான் நினைக்கவில்லை.

அப்படி வந்தால் கூட நிச்சயமாக எமது கைகளில் அவர்கள் சிக்குவார்கள்.

இலங்கை கடற்படைக்கு இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை வாங்கத் திட்டமிட்டுள்ளோம். இந்த ஆண்டில் அதற்காக உடன்பாடு செய்து கொள்ளப்படலாம். அந்தக் கப்பல்களை கட்டி எம்மிடம் ஒப்படைக்க மூன்று ஆண்டுகள் எடுக்கலாம்.

நாம் ஐந்து ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம். அதன்படி மேலதிக கப்பல்களை வாங்கும் திட்டங்கள் உள்ளன. ஆனால் பாரிய போர்க் கப்பல்களை வாங்கும் எண்ணம் கிடையாது. எம்மிடம் போதியளவு ரோந்துப் படகுகள் உள்ளன.

எமது பொருளாதார வலயத்தில் இவற்றின் மூலம் கண்காணிப்பை மேற்கொள்ள முடியும். அதற்கு எமக்கு பாரிய கப்பல்கள் தேவை. கணிசமானளவு காலம் ஆழ்கடலில் நின்று கண்காணிப்பை மேற்கொள்ள அவை பயன்படும். எனவே அவற்றைப் பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

ஆனால் கரையோர ரோந்துப் பணிகளுக்கு சிறிய படகுகள் தேவைப்படுகின்றன.

கடற்படையை மேலும் விரிவுபடுத்துவது தான் அரசாங்கத்தின் திட்டம். பலமான கடற்படையை பேணுவதே இலங்கை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலரின் நோக்கமாகும்.

எல்லா ஆயுதங்களுமே கடல்வழியாகத் தான் எமது நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. விமானங்கள், பாரிய துப்பாக்கிகள், டாங்கிகள், ஆட்டிலறிகள் என்று எல்லாமே கடல் வழியாகத் தான் கொண்டு வரப்பட்டன.

எமது கடற்படை போதுமான பலத்துடன் இல்லாதிருந்த காலத்தில் இவை கொண்டு வரப்பட்டன. நாம் பலவீனமாக இல்லாத போதும், அப்போது போதுமான பலத்துடன் இருக்கவில்லை.

புலிகளைத் தோற்கடிப்பதில் கடற்படை மிக முக்கியமான பங்கை ஆற்றியுள்ளது. அவர்களின் ஆயுதக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டது போரில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

எமது நாடு தீவாக இருப்பதால் எதிர்காலத்திலும் கடற்படை முக்கியமானது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கடற்படையை விரிவுபடுத்த வேண்டும்.

மீன்பிடி, எண்ணெய் அகழ்வு, கப்பல் போக்குவரத்து, துறைமுக அபிவிருத்தி போன்ற பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதால் நாட்டைச் சுற்றியுள்ள கடலைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.



# சுட்டுவிரல்!....

## தன்னைக் கொல்ல வந்தவரையே மன்னிக்கும் மகாத்மா

தன்னைக் கொல்ல வரும் பசுவைக் கூடக் கொல்வது தவறல்ல என்றார் மகாத்மா காந்தியடிகள். ஆனாலும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அதையும் கடந்த உயர்வான கருணை மிகு தலைவராகத் தன்னை அடையாளப்படுத்தியிருக்கின்றார்.

கடந்த 2004 மார்ச் மாதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கொள்ளுப்பிட்டி அமைச்சு அலுவலகத்திற்குப் புலிகளால் ஏவிவிடப்பட்ட தற்கொலைக் குண்டுதாரியொருவர் அமைச்சரைக் கொன்றொழிக்கும் நோக்குடன் சென்றிருந்தார். சாதாரண பெண் போல் சென்றிருந்திருந்த தற்கொலையாளியைச் சரியாக இனங்கண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் குறித்த தற்கொலையாளியை அமைச்சு வளாகத்தில் இருந்து தந்திரமாக அப்புறப்படுத்தியிருந்தார். அதன் பின் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தற்கொலையாளி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார். தன் நோக்கம் நிறைவேறாத நிலையில் தற்கொலையாளி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் வைத்து தன்னை வெடித்துச் சிதறவைத்ததோடு மட்டுமின்றி அங்கு கடமையில் இருந்திருந்த பொலிஸாரையும் பலி யெடுத்திருந்தார்.

இச்சம்பவம் குறித்த வழக்கு இப்போதும் நீதிமன்றில் உள்ளது. தற்கொலையாளியை அழைத்து வந்ததாகச் சந்தேகிக்கப்படும் இன்னொரு பெண்ணான சத்தியலீலாவதி என்பவர் கைது செய்யப்பட்டதோடு, நீதி விசாரணைக்காக இன்னமும் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார். இந்த வழக்குத் தொடர்பான சாட்சியங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் ஒருவர். ஆனாலும், நீதிமன்றம் சென்று சாட்சியமளிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இதுவரை முன் வந்ததாகத் தெரியவில்லை. எய்தவன் இருக்க அம்பை நோவதைப்போல் ஏவிவிட்டவன் இருக்க ஏவிவிடப்பட்டவர்களை தண்டிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விரும்பியிருக்கவில்லை. இது போலவே களுத்துறை சிறையில் உண்ணாவிரதம் இருந்த கைதிகளின் நலன் குறித்து அக்கறை கொண்டு நேரில் சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் திட்டமிட்ட வகையில் புலிகளின் உறுப்பினர்களான கைதிகளால் மிக மோசமாக தாக்கப்பட்டிருந்தார். கோமா நிலைக்குச் சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பீனிக்ஸ் பறவை போல் உயிர் மீண்டு எழுந்திருந்த போதும் தன்னை தாக்கியவர்களை அடையாளம் காட்டுவதற்கோ அன்றி தண்டிப்பதற்கோ விரும்பியிருக்கவில்லை. இவ் விடயத்திலும் அவர் நீதிமன்றம் சென்று சாட்சியம் அளிப்பதற்கு முன்வந்திருக்கவில்லை. சிறைக் கைதிகளாக இருந்த புலி உறுப்பினர்களை தன் மீது தாக்குதல் நடத்த ஏவிவிட்டிருந்த புலிகளின் தலைமையே தண்டனைக்குரியவர் என்று தீர்மானித்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அப்பாவித தமிழ் மக்களின் பிள்ளைகளாகிய சாதாரண புலி உறுப்பினர்கள் வெறுமனே ஏவிவிடப்பட்டவர்கள் என்ற வகையில் அவர்களை மன்னித்திருந்தார்.

இந்நிலையில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்த தற்கொலைத் தாக்குதல் சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்குமாறு கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு நீதிமன்றம் தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வந்திருந்தது. வழமையான தனது பகுத்தறிவு மற்றும் மனிதநேயப் பண்புகளாலும், ஏவி விட்டவர்கள் வேறு யாராகவோ இருக்க ஏவி விடப்பட்டவர்களை தண்டிப்பதை விரும்பாத காரணத்தினாலும் நீதிமன்றம் செல்வதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தவிர்த்து வந்திருப்பதாகத் தெரிகிறது. இது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. இந்நிலையில் கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீதிமன்றம் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மீதான அழைப்பாணை என்பது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அத்தோடு இவ் வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

நீதியின் தீர்ப்பிற்கு சகலரும் தலை வணங்கியே தீரவேண்டும். ஆனாலும் நீதிமன்றம் தீர்ப்பெழுத முன்னரே வரலாறு சிலருக்கு தீர்ப்பெழுதிவிடுகின்றது. இந்நிலையில் தன்னையே கொல்ல வந்தவர்களை மன்னித்தருளும் கருணை மகான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமிழ் மக்களிடையே ஒரு வரலாற்று நாயகனே.

இதுவே உண்மைநிலை என்ற நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நீதிமன்றத்தில் சரண். இவ்வாறு மட்டும் செய்திகளை வெளியிட்டு உண்மைகளை இருட்டில் தள்ளிவிடுவதால் உண்மை ஒருபோதும் ஒழியப்போவதும் இல்லை, அழுக்காகிவிடப் போவதும் இல்லை.

யார் குற்றவாளிகள்?......... நீதான் குற்றவாளி என்று ஒருவரை நோக்கி சுட்டுவிரல் மட்டும் நீழும்போது மற்ற விரல்கள் நான்கும் மடிந்து சுட்டிநிற்பவரையே குற்றவாளி என்று சுட்டிக் காட்டுகின்றது.

*- சூரியபுத்திரன்.*

---

### நெடுந்தீவுக்கான கடல்.....

மேற்படி பயணிகள் கப்பலானது வடபகுதிக்கு எடுத்துவரப்பட்ட நிலையில் நேற்றைய தினம் அதன் வெள்ளோட்டத்தை அமைச்சரவர்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நேற்று காலை முக்கியஸ்தர்கள் சகிதம் குறிகாட்டுவான் இறங்குதுறையினைச் சென்றடைந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், நாடா வெட்டி கப்பல் பயணத்தை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பயணிகள் சகிதம் முதலில் புனித பூமியாம் நயினாதீவினை கப்பல் சென்றடைந்த நிலையில் அங்கு ஸ்ரீ நாகபூசணி தேவஸ்தானம் மற்றும் நாக விஹாரை ஆகியவற்றில் விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கப்பலின் உள்ளேயும் கைலாச ராஜு குருக்களினால் விசேட பூஜை வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன.

சமய வழிபாடுகளைத் தொடர்ந்து புதிய பயணிகள் கப்பலானது நெடுந்தீவிற்கான தனது பயணத்தினை ஆரம்பித்தது. இச்சமயம் ஈபிடிபி கட்சி தொண்டர்கள் சகிதம் கப்பலில் பிரசன்னமாகியிருந்த முன்னாள் வேலணை பிரதேச சபைத்தலைவர் கருணாகரகுருமூர்த்தி அவர்கள் பயணிகள் அனைவருக்கும் குளிர்பானம் வழங்கி புதிய பயணிகள் சேவையின் மகிழ்ச்சியில் பங்கெடுத்தனர்.

ஏறக்குறைய நடுக்கடலினை கப்பல் சென்றடைந்த வேளை நெடுந்தீவிலிருந்து தேசியக் கொடிகளுடனும் ஈபிடிபி கட்சிக் கொடிகளுடனும் சாரிசாரியாக வரத்தொடங்கிய பெருந்தொகையான கடற்றொழில் படகுகள் இக்கப்பலை சூழ்ந்து கொண்டு வரவேற்பளித்து அழைத்துச் சென்றன. தமக்கு பாதுகாப்பான சௌகரியமான புதிய பயணிகள் கப்பல் சேவை கிடைக்கப் பெற்ற மகிழ்ச்சியைக் குறிக்கும் முகமாக நெடுந்தீவு கடற்றொழிலாளர்கள் மேற்கொண்ட மேற்படி கடல் அணிவகுப்பானது கண்கொள்ளாக் காட்சியாக காணப்பட்டது.

நெடுந்தீவின் பிரதான இறங்குதுறையான மாவலித்துறையினை கப்பல் அண்மித்த போது ஏறக்குறைய முழு நெடுந்தீவு மக்களும் அங்கு திரண்டு வந்து வரவேற்பளித்தனர். இச்சமயம் பட்டாசுகள் வான வேடிக்கைகள் முழங்க பாடசாலை மாணவிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் கப்பலுக்கு கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

முக்கியஸ்தர்களுடனும் பயணிகளுடனும் நெடுந்தீவில் கால்பதித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மாவலித்துறையில் இடம்பெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்திலும் பங்குகொண்டார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய நெடுந்தீவு மக்கள் பிரதிநிதியான சீலன்,சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் நெடுந்தீவில் கால் பதித்த அமைச்சரவர்கள் பாலன் இயேசு பிறந்த தினத்தன்று புதிய இருநூறு ரூபாவினை எமக்கு அன்பளிப்பாக வழங்கினார். இன்றோ எட்டுக்கோடி ரூபா பெறுமதியான கப்பலையே நெடுந்தீவு மக்களுக்கு வழங்கியுள்ளார் எனத்தெரிவித்தார்.

நான் சொல்வதைச் செய்வேன் செய்வதைச் சொல்வேன் என்பதை வலியுறுத்தி உரையாற்றிய அமைச்சரவர்கள் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் ஆயுத வன்முறையினால் சகலராலும் கைவிடப்பட்ட அந்தரித்த நெடுந்தீவு மக்களுடன் தான் ஒன்றித்திருந்ததை நினைவுகூரவும் தவறவில்லை. அத்துடன் கப்பலானது இறங்குதுறைக்கு சிரமமின்றி வந்துசெல்லும் முகமாக மாவலித்துறைப் பகுதியானது ஒன்றரை மாத காலப்பகுதியில் ஆழப்படுத்தும் பணிகளும் ஆரம்பிக்கப்படும் என்ற தகவலையும் அமைச்சரவர்கள் தெரியப்படுத்தினார்.

நிகழ்வின் நிறைவாக தமது நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினாலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினாலும் வழங்கப்பட்ட மேற்படி பயணிகள் கப்பலுக்கு 'மஹிந்த தேவா'எனப் பெயர் சூட்ட வேண்டும் என நெடுந்தீவு மக்கள் ஏகமனதாக கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற நேற்றைய நிகழ்வில் ஈபிடிபி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின் (உதயன்) யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ரூபிணி வரதலிங்கம் தீவகம் வடக்கு பிரதேச செயலாளர் சிறிமோகனன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண பணிப்பாளர் மரியதாஸ் நிறைவேற்று பொறியியலாளர் சுதாகர் வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் சிவநேசன் யாழ்.மாவட்ட ஈபிடிபி அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தீவக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் பிரேமரட்ண தீவக கடற்படை கொமாண்டர் நிஷாந்த யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமார் உள்ளிட்ட பெருந்தொகையான முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

### வவுனியாவில்....

செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு இணங்க பொலிஸாரும், படையினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தமது தந்தையை விடுவிக்குமாறு குறித்த குடும்பஸ்தரின் 3 பிள்ளைகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தடுப்புக்காவல்.....

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த நீதி அமைச்சர் பொதுமக்களுட னான சந்திப்பு ஒன்றின் போதே மேற்படி தகவல்களை வெளியிட்டார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பத்து மூத்த அதிகாரிகள் அடங்கிய குழுவினர் மேற்படி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் கோவைகளை தற்போது பரிசீலித்து வருவதாகவும் இவர்களது விடுதலை குறித்து மிக விரைவில் நீதிமன்றம் மூலமாகப் புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப் படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடும் பொருட்டு, மன்னார் விளாத்திக்குளம் மற்றும் கிளிநொச்சி பூநகரி நாச்சிக்குடா ஆகிய பகுதிக்கு அமைச்சர் நேற்று முன் தினம் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளின் விடுதலை குறித்து பொதுமக்கள் பலர் அமைச்சரிடம் முறையிட்டனர்.

அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர், சிறையில் உள்ள தமிழ்க் கைதிகளது விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த விடயம், நீதியமைச்சிற்கு மாத்திரம் தொடர்புபட்ட ஒன்று அல்லவெனவும், இதில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் தொடர்பு இருக்கின்றமையையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறயினும், இவர்களின் விரைவான விடுதலையின் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய சகல நடவடிக் கைகளும் தம்மால் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### வடதாரகை...

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய துறைமுகத்திற்கு சென்று அங்கு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றதுடன், நயினை நாகவிகாரையிலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்று அங்கிருந்து நெடுந்தீவுக்குச் சென்றடைந்தது.


மேற்படி வெள்ளோட்ட நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), யாழ். மாவட்ட பொறுப்பாளர் கமலேந்திரன் (கமல்), யாழ். மாநகரசபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, கூ.அ.உ ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் என்.ஸ்ரீமோகனன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

புதிய படகுடன் வருகை தந்த அமைச்சர் மற்றும் பிரமுகர்களையும் நெடுந்தீவு மாவிலி துறைமுகப் பகுதியிலிருந்து நெடுந்தீவு மகா வித்தியாலய பாண்ட் வாத்திய அணி, நெடுந்தீவு றோ.க மகளிர் கல்லூரி பாண்ட் வாத்திய அணி என்பன சகிதம் வரவேற்கப்பட்டு நெடுந்தீவு ப.நோ.கூ.சங்க புதிய தலைமைச் செயலக மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு நெடுந்தீவு ப.நோ.கூ சங்கத்திற்கான புதிய தலைமைச் செயலக கட்டடத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வின்போது பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். மேற்படி நிகழ்வுக்கு நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் தலைமை தாங்கினார்.

(27)



# வவுனியாவில் அகதி முகாம்களுக்கு மூடுவிழா; அங்கு தங்கியிருந்த மக்கள் நிர்க்கதி நிலையில்

## கைவிரிக்கும் அரசாங்க அதிபர்கள்



(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்கள் மூடப்படவுள்ளதால் அங்கு தங்கியுள்ள மக்க ளை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக அவரவர் சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மேற்படி நலன்புரி நிலையங்களிலிருந்து வருகின்ற மக்களை உடனடியாக மீள்குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென யாழ்., கிளிநொச்சி அரசாங்க அதிபர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை தொடர்புகொண்டு கேட்டபோது,

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களிலிருந்து வருகின்ற மக்களை தங்கவைக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் புதிதாக நலன்புரி நிலையமொன்று அமைப்பதற்கான திட்டமில்லையென அவர் தெரிவித்தார்.

காணி இல்லாதவர்களுக்கும் புதிதாக காணி வழங்கி அவர்களை மீள்குடியேற்றுவதற்கான திட்டம் எதுவும் இல்லையெனவும் அவர் கூறினார்.

மேற்படி நலன்புரி நிலையங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற மக்கள் தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்க விரும்பினால் அவர்கள் அங்கு தங்கியிருக்கலாமெனவும் அவர் கூறினார்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக நான் ஏற்கனவே ஊடகங்களுக்கு அறிவித்துள்ளேன். கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட இப்பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக காத்திருக்கிறோம். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் மக்கள் அவரவர் சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

# ரயிலுடன் மோதி இளம்பெண் மரணம்

## - காதலர் தினத்தில் சோகம் -

(கொழும்பு)

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்த ரயிலின் முன்னால் குதித்து சீனன்குடாவை சேர்ந்த யுவதி ஒருவர் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மரணமடைந்துள்ளார்.

காலை கிணற்றடியில் உடைகள் கழுவிக்கொண்டிருந்த வேளையில் தொலைபேசி அழைப்பு வந்து பேசிக்கொண்டிருந்த தனது மகள், ரயில் வந்தவுடன் பாய்ந்ததாக மரணமானவரின் தந்தை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மரணமடைந்தவரின் சடலம் தற்சமயம் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சீனன்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரித்தானியா 20 கோடி நிதி உதவி

இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிப்படைந்த மக்களுக்கு நிதி உதவி செய்ய பிரித்தானிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் 20 கோடி ரூபா நிதியினை பிரித்தானிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கும் என பிரித்தானியத் தூதுவராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவி வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பாதிப்படைந்த மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்காக பயன்படுத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவி ஐரோப்பிய சமூக மனிதாபிமான செயலகம், ஐக்கிய நாடுகளின் அவசர நிதி உதவி அமைப்பு ஆகியனவற்றின் ஊடாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தபால்மூல வாக்களிப்பு மார்ச் இரண்டாம் வாரம்

## ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக மூன்று லட்சத்து 21 ஆயிரத்து 595 அரச பணியாளர்கள் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் 8 மற்றும் 9 ஆம் திகதிகள் அஞ்சல் மூல வாக்களிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக 4 லட்சத்து 15 ஆயிரத்துக்கும் அதிகமான அரச பணியாளர்கள் தகுதி பெற்றிருந்தனர்.

எனினும் இந்த முறை 90 ஆயிரம் அரச பணியாளர்கள் வரையில், அஞ்சல் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நீதிமன்ற ஆவணங்கள் தீக்கிரை; இரகசியப் பொலிஸார் விசாரணை

## இச்சம்பவத்தின் பின்னணி என்ன?

(கொழும்பு)

அனுராதபுர மாவட்ட நீதிமன்றத்தின் ஆவணங்கள் பாதுகாக்கப்படும் அறையில் இடம்பெற்ற தீப்பரவல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை உடனடியாக இரகசியப் பொலிஸாருக்கு ஒப்படைக்குமாறு, அனுராதபுர நீதிமன்றம் பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது வரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகளை, இரகசியப் பொலிஸாருக்கு வழங்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சம்பவம் தொடர்பில் இதுவரையில் ஒருவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன் இது தொடர்பிலான அரசாங்க இரசாயன பரிசோதனை அறிக்கையும் தமக்குக கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அனுராதபுர சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரஞ்சித் ராஜகருணா, பொலிஸார் இது தொடர்பில் அசமந்தப் போக்கை கடைபிடிப்பதாகவும், இதனால் விசாரணை நடவடிக்கைகளை உடனடியாக இரகசியப் பொலிஸாருக்கு ஒப்படைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து இந்த உத்தரவு பிறக்கப்பட்டது. அனுராதபுர நீதிமன்றத்தின் ஆவணங்கள் பாதுகாக்கப்படும் அறையில் கடந்த மாதம் 25 ஆம் திகதி இந்த தீப்பரவல் சம்பவம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையில் நிரந்தர....

என அவர் தெரிவித்துள்ளார். வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் கூடுதலான உறவினை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரித்தானிய அரசாங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஜோன் ரான்கீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

### தமிழ்மக்கள் சுதந்திரமாக....

ஆணையாளரிடம் இக் கோரிக்கையை முன்வைத்தார்.

முகாம் மக்களின் வாக்குகளை இல்லாமல் செய்ய அரசாங்கம் தேர்தல் வாக்குச் சாவடிகளை தூரப்பிரதேசங்களில் அமைத்திருப்பதாகவும், இதனால், 70 கிலோ மீற்றர் தூரம் சென்று வாக்களிக்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள் ளதாகவும் இச் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், தமிழர்களின் வாக்குகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

### இலங்கையில் காணாமல்போகும்...

மன்னிப்புச்சபை இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த 10 ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் மனிதவுரிமை செயற்பாட்டாளர் பட்டானி ரசீக் காணாமல் போன சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என அடையாளம் காணப்பட்ட நபர் இலங்கை அரசாங்கத்துடன் மிக நெருக்கமானவர் என சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி தெரிவித்துள்ளார்

புத்தளம் பகுதியில் இயங்கி வந்த சமூக நம்பிக்கை நிதியம் எனும் அமைப்பின் தலைவரும், மனிதவுரிமைச் செயற்பாட்டாளருமான 55 வயதான பட்டானி ரசீக் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி இனந்தெரியாதோரால் பொலனறுவைப் பகுதியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

பொலனறுவைப் பகுதிக்குச் சென்றிருந்த இவர் தனது நண்பர்களுடன் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் அவர்களை வெள்ளை வானொன்று இடைமறித்துள்ளது. இவ் வாகனத்தில் இருந்தவர்களுடன் அரபு மொழியில் நட்புடன் உரையாடிவிட்டு அவ் வாகனத்தில் இவர் சென்றுள்ளார். தனது நண்பர்களை பின்னர் சந்திப்பதாகக் கூறிவிட்டு அவ் வாகனத்தில் சென்ற இவர் பின்னர் வீடு திரும்பாததை அடுத்து, புத்தளம் பொலிஸ் நிலையத்திலும், இலங்கையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிலும் அவரது குடும்பத்தினர் முறைப்பாடு செய்திருந்தனர்.

பொதுமக்களின் மனிதவுரிமை விவகாரம் குறித்து கரிசனையுடன் செயற்பட்டு வரும் சமூக நம்பிக்கை நிதியம், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவிகளை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை....

அதையடுத்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உத்தியோகஸ்தர்கள் விமானத்தில் தீவிர தேடுதல்களை மேற்கொண்டதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பேச்சாளர் ருவினி ஜயசிங்க ஹவீரு டெய்லி பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

பின்னர் இந்த வெடிகுண்டு அச்சுறுத்தல் ஒரு புரளி எனவும், பயணியொருவரால் இது ஏற்பட்டது எனவும் என நாம் கண்டறிந்தோம்.

இவ்விமானம் மாலைதீவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வழமையான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என அப்பேச்சாளர் தெரிவித்தார்.

மாலைதீவில் இவ்விமானம் சோதனைக்காக ஒரு மணித்தியாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது லண்டன் நோக்கிப் புறப்பட்டது.


## 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுப்பவேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

அனுப்ப வேண்டிய முகவரி:-
தினமுரசு விளையாட்டு அரங்கு,
இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ICC Cricket World Cup 2011

போட்டி இல: 01

தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

01) முதலாவது உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய அணி எது?
02) 19ஆம் திகதி நடைபெறவுள்ள 10ஆவது உலகக் கிண்ணத்தின் முதலாவது போட்டியில் வெல்லப்போகும் அணி எது?
03) இப்போட்டியின் ஆட்டநாயகன் யார்.

பெயர் :-................................
முகவரி:-................................
போ.இல:-................................
விடைகள்: 01) ................................
02) ................................
03) ................................

உங்கள் விடைகளை 18ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள்


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.